விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 08 செவ்வாய்க்கிழமை (25.10.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 310

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமெந்து

## மினிவான் - ஆட்டோ விபத்து ஒருவர் பலி; மூவர் படுகாயம்!

### நாவற்குழியில் நேற்றுக்காலை பயங்கரம்

(சாவகச்சேரி)

கைதடிச் சந்திக்கும் நாவற்குழிச் சந்திக்கும் இடைப்பட்ட ஏ9 வீதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்ற மினி வான் - ஆட்டோ விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். ஆட்டோச் சாரதி உட்பட மூவர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினிபஸ் ஒன்றும் சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த ஆட்டோ ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்று கொண்டிருந்த பெண்மணி ஒருவர் கைத் தொலைபேசி அழைப்பு வந்தவுடன் திடீரென மோட்டார் சைக்கிளை நிறுத்தியதாகவும், அவ்வேளை பின்னால் வந்த மினிபஸ் அம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுடன் கஜேந்திரன் எம்.பி. சந்தித்துப் பேச்சு

ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமார், தமிழக விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் பொதுச் செயலர் தொல்.திருமாவளவன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

பெல்ஜியத்தில் நேற்று நடைபெற்ற 'எழுக தமிழ்' நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்ற போது அவர்கள் இச் சந்திப்பினை மேற்கொண்டனர். இச்சந்திப்பின்போது தமிழர் தரப்பின் பிரச்சினைகளை அவர்கள் எடுத்து விளக்கினர்.

பெல்ஜியத்தில் நடைபெற்ற மக்கள் எழுச்சி நிகழ்வின் மூலம் தமிழ்மக்கள் பிரச்சினைகளை அவர்கள் தெரிவித்த கருத்துக்களிலிருந்து புரிந்துகொண்டதாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந் திரன் நம்பிக்கை வெளியிட்டார்.

எதிர்காலத்தில் ஐரோப்பிய ஒன்றியம் தங்களது முடிவுகளை மறுபரிசீலனை செய்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதாக தாங்கள் நம்புவதாக கஜேந்திரன் தெரிவித்தார்.

(ச-4)

# கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது 'எழுக தமிழ்' பேரணியில் திரண்டமக்கள் பெல்ஜியம் அதிர உரிமைக் கோஷம்



(பெல்ஜியம்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையினை மீளப்பெறவேண்டுமென வலியுறுத்தி பெல்ஜியத்தில் 'எழுக தமிழ்' எழுச்சிப்பேரணி நேற்று நடைபெற்றது.**

**புலம்பெயர்வாழ் தமிழ்மக்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது பெல்ஜியத்தின் பிரசெல்ஸ் நகரிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைச் செயலகம் முன்பாக எழுச்சிப்பேரணியை நடத்தினர்.**

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலிருந்து இருநூற்றுக்கும் அதிகமான பஸ்களில் ஐரோப்பிய ஒன்றிய தலைமைச் செயலகத்தின் முன்றலில் ஒன்றுதிரண்ட பல்லாயிரக் கணக்கான புலம்பெயர்வாழ் தமிழ்மக்கள் உணர்வுபூர்வமாக தமது கோரிக்கைகளினை முன்வைத்து நிகழ்வில் கோஷமிட்டனர்.

ஐரோப்பிய நேரப்படி நேற்று நண்பகல் 12 மணிக்கு இந்த உரிமை முழக்கப் போராட்டம் ஆரம்பமாகியது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைச் செயலக முன்றலில் நடைபெற்ற இந்நிகழ்வின் ஆரம்பத்தில் பாரம்பரிய நாதஸ்வர இசை வாசிக்கப்பட்டது. பின்னர் பொதுச் சுடரினை தமிழக விடுதலை சிறுத்தைகள் இயக்கத்தின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் கண்காணிப்புக்குழு வவுனியாவில் சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையில் வவுனியாவில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது நாளை மறுதினம் வவுனியாவில் நடைபெறவுள்ள தமிழ் எழுச்சி மாநாடு தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

வவுனியா வாழ் அனைத்துத் தமிழ்மக்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தமிழ் எழுச்சி நிகழ்வானது இராணுவத்தினரின் இடையூறுகள் இல்லாமல் நடைபெறவேண்டுமென தாம் கண்காணிப்புக் குழுவினரிடம் கேட்டுக்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட் டார்.

இதேவேளை வவுனியாவில் கிராமசேவையாளர் ஒருவர் கடந்த வாரம் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் , வெகுஜன அமைப்புக்களின் தலைவர்களின் வீடுகள் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் என்பன தொடர்பாக யுத்தநிறுத்தக் கண் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சி.சு.க. - ஐ.தே.க. கூட்டுச் சேர்ந்து தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு

### நேற்றைய சந்திப்பில் முடிவு

(கொழும்பு)

இரு தசாப்தகாலமாக நிலவி வரும் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்பட இருகட்சிகளின் தலைவர்களும் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவிற்கும், எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று இரண்டு மணிநேரமாக நடைபெற்ற இச்சந்திப்பிலேயே இத் தீர்மானத்தினை இருவரும் எடுத்துள்ளனர்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இருகட்சிகளும் இணைந்து செயற்படுவது மட்டுமன்றி அது சம்பந்தமாக தொடர்ந்து மேலும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும் இருவரும் இணங்கியுள்ளனர்.

இதேவேளை சுயாதீனமான முறையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலினை நடத்தவும் தேர்தலுக்குப் பின்னர்வன்முறைகளைத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# வட-கிழக்கு மக்களுக்கு சிறுசலுகைகூட வழங்காத மஹிந்த மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை எப்படிக் கவனிப்பார்?

## புதிய இடதுசாரி முன்னணி

(கொழும்பு)

போடடி நிறைந்த இந்த ஜனாதிபதித் தேர்தலில், இடதுசாரிகளின் ஐக்கியத்தை வலியுறுத்துவதற்காகவே நாம் இத் தேர்தலில் போட்டியிடுகின்றோம். பிரதான இரண்டு அரசியல் கட்சிகளும ஒன்றையொன்று முட்டி போதுவதையிட்டு, மக்கள் ஏமாந்து போய் விடக்கூடாது. இந்த இரண்டு கட்சிகளில் யார் வெற்றி பெற்றாலும் பெரிய மாற்றங்கள் எதுவும் நடைபெறப் போவதில்லை என புதிய இடது சாரி முன்னணியின் செயலாளர் தோழர் லீனல் ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரத்மலானை புகையிரத தொழிலாளர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பொய்யான ,வாக்குறுதிகள் பலவற்றை இவர்கள் மக்கள் முன் முன்வைத்து வருகின்றனர். கடந்த 50வருட காலமாக இருந்து வரும் இந்த நோய்க்கு மக்கள் தகுந்த பாடத்தைப் புகட்ட வேண்டும். நெலலுக்கு 17ரூபா வழங்குவதாக ஒருவர் கூறுகிறார் மற்றவர் ரூபா 17.50 வழங்குவதாக, கூறுகிறார். உண்மையில் விவசாயிகளின் நிலைமை மிகப் பரிதாபகரமாகவுள்ளது. எந்தவித கட்டுப்பாடுகளுக்கு மின்றி திறந்த பொருளாதார கொள்கையை நடைமுறைப் படுத்துகின்ற இந்த அரசுகள் எப்படி இந்த நாட்டின் விவசாயிகளை காப்பாற்ற முடியும்.

நாட்டின் வளங்களை வெளிநாட்டுக் கம்பனிகளுக்குத் தாரை வார்ப்பதே இந்தப் பிரதான இரு கட்சிகளினதும் குறியாகும். இதன் மூலம் பெறப்படும் பணத்தைக் கொண்டு தமது சொந்த சுகபோகங்களை அனுபவிப்பதே இவர்களின் இலக்காகும். வறுமையினாலும், போசாக்கின்மையாலும் மக்களின் வாழ்க்கைநிலை மோசமான கட்டத்தை அடைந்துள்ளது.

மலையக மக்கள் அபிவிருத்தி எதுவுமின்றி மிகவும் துன்பச் சூழ் நிலையில் வாழ்கின்றனர். வடக்கு-கிழக்கு மக்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டது மட்டுமன்றி சுனாமியினாலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு சிறு சலுகை கூட காட்டாத மஹிந்த முன்னணியினர் எப்படி இந்நாட்டு மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கவனிப்பார்கள்?

ரணில் விக்கிரமசிங்க கூட ஏகாதி பத்திய வாதிகளின் நலன்களுடனேயே பின்னிப்பிணைந்துள்ளார். இவரால் இந்த நாட்டின் பிரச்சினைக்கு ஒரு தெளிவான முடிவை எடுக்க முடியாது. இடதுசாரி சக்திகளை பலப்படுத்துவதன் மூலமே ஒளியை ஏற்ற முடியும் என்றார். (ற)

## ஊரிக்காடு மயானம் புனரமைப்பு

ஊரிக்காடு இந்துமயானம் உலக உணவுத்திட்டத்தினரின் நிதியுதவியுடன் வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற சுகாதாரத் தொழிலாளர்களால் துரிகதியில் புனரமைக்கப்பட்டு பனம் விதைகள் நாட்டப்பட்டு வருகிறது.

இந்த மயான திருத்தப்பணிக்கான பொருள், மற்றும் வாகன உதவிகளை வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் வழங்கி வருகிறது. இந்த மயானம் நீணடகாலமாக புனரமைக்கப்படாமை குறித்து விரிவான செயதி யொனறினை வலம்புரி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ற-32)

# அபிவிருத்தி என்ற பெயரில் மக்களை அடிமைகளாக வைத்திருக்கக் கூடாது

## -'பேர்க் கோவ் பவுண்டேசன்' நிறுவன வளவியலாளர்

(தென்மராட்சி)

மனித வாழ்வில் பிரிக்கமுடியாத அங்கமாக முரண்பாடு விளங்குகின்றது. இருந்த போதிலும் முரண்பாடு என்பதை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால் முரண்பாடு எனும் கோட்பாட்டுக்குக் கொள்கையளவில் முழுமையான விளக்கம் அளிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தினால் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட 'முரண்பாடுகள்' பற்றிய பயிற்சிப் பட்டறையில் விரிவுரையாற்றிய பேர்க் கோவ் பவுண்டேசன் நிறுவனத்தைச் சேர்ந்த வளவியலாளர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

மனித நேய அமைப்புக்களின் ஒனறியத்தின் யாழ்மாவட்ட இணைப்பாளர் இ.பகீரதன் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிப்பட்டறையில் யாழ்.மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கு கொண்டிருந்தனர்.

வளவியலாளர் சுரேன் ராகவன் அங்கு தொடர்ந்தும் குறிப்பிடும் போது,

மனித வாழ்க்கையில் முரண்பாடு ஏற்படுவது யதார்த்தமாகும். ஆனால் நாம் இவற்றினை எவ்வாறு முகாமைத்துவம் செய்கின்றோம் என்பதுதான் முக்கிய மானதாகும்.

முரண்பாடுகள் இல்லையேல் வளர்ச்சிகள் இல்லை. பொதுவாக முரண்பாடுகள் தோற்றம் பெறும் போது அவற்றினை நாம் எப், போதும் எதிர்மறையாகவே நோக்குகின்றோம்.

ஏற்படும் முரண்பாடுகளினால் நன்மையும் ஏற்பட இடமுண்டு என்பதை நாம் மறந்துவிடுகின்றோம். முரண்பாடுகள் ஏற்படுத்தும் தாக்கங்களை சரியான அணுகுமுறைகள் மூலம் தீர்த்துக்கொள்ளவேண்டும்.

இன்றைய கால கட்டத்தில் அபிவிருத்தி என்றால் என்ன என்பதற்கான விளக்கம் சரியாகப் புரியப்படாமல் இருந்து வருகின்றது. அபிவிருத்தி என்பது மக்களை சுதந்திர முள்ளவர்களாக ஆக்க வேண்டும்.

அபிவிருத்தி என்ற பெயரில் மக்களை அடிமையாக வைத்திருக்க முயலக்கூடாது இன்றைய கால கட்டத்தில் அநேக விடயங்கள் அபிவிருத்தி என்ற போர்வையில் மக்கள் அடிமைகளாக வைக்கப் பட்டுள்ளனர். இதனை மாற்றிக் கொள்வதற்கு ஏதுவாக கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் போது அபிவிருத்தியின் உண்மையான அர்த்தம் புரியப்படும் என்றார். (ற-16)

## இராசிபலன்

25.10.2005

(ஐப்பசி 8, செவ்வாய்க்கிழமை)

அட்டமி முன்னிரவு 9.29 மணிவரை

பூசம் பின்னிரவு 2.35 மணிவரை

இராகுகாலம்- 3.02 - 4.32 மணிவரை

சுபநேரம் - 10.32 - 12.02 மணிவரை

சித்தம்

| | |
|---|---|
| மேடம் | புதிய விடயம், மனச்சஞ்சலம், காரிய தாமதம், தெய்வசிந்தை. |
| இடபம் | சகோதரர் உதவி, முயற்சி கைகூடும், அந்நியர் சந்திப்பு, பிரயாண நன்மை. |
| மிதுனம் | சிந்தனை மிகுதி, பணவிரயம், அதிகவார்த்தை, காரிய இடையூறு. |
| கடகம் | அறிஞர் சந்திப்பு, நல்லமுயற்சி, போசன சுகம், பிரயாணம். |
| சிங்கம் | தொழில் நன்மை, வாக்கு மேன்மை, நண்பர்கள் சந்திப்பு, காரிய அலைச்சல். |
| கன்னி | முயற்சி கைகூடும், நல்ல வருமானம், பெருமையடைதல், குடும்ப மகிழ்ச்சி. |
| துலாம் | தெய்வ சிந்தை, அதிகாரம், உற்சாகம், காரிய நன்மை. |
| விருச்சிகம் | புதிய முயற்சி, அதிக செலவு, வீண்பயம், கட்டுப்பாடு. |
| தனுசு | ஆரோக்கியக் குறைவு, அபகீர்த்தி, முயற்சி தாமதம், வாகனபயம். |
| மகரம் | கலந்துரையாடல், நல்லசெய்தி, தொழில் விருத்தி, உற்சாகம். |
| கும்பம் | நல்ல முயற்சி, சத்துரு ஜெயம், பெரியோர் சந்திப்பு, உடல் நலம். |
| மீனம் | மனச் சஞ்சலம், சொத்துப் பிணக்கு, முயற்சி தாமதம், பணவிரயம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

\- வளவன்

## நினைவு தினம்

(சுன்னாகம்)

ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஒறேற்றர் சி.சுப்பிரமணியம் அதிபரின் நினைவுதினம் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி முதல்வர் க.சிவாஜி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நினைவுப் பேருரையை மருதனார்மட கிறீஸ்தவ இறையியல் கல்லூரி முதல்வர், பேராயர் கலாநிதி சு.ஜெபநேசனும் நிறைவுரையை ஸ்கந் தவரோயக்கல்லூரி உப அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனும் வழங்கவுள்ளனர்.(த-7)

## விண்ணப்பம் கோரல்

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிகளை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை அல்லது உளளூராட்சி முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு I அல்லது வகுப்பு II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும்.

அத்துடன், எல்லா விண்ணப்பதாரர்களும் விண்ணப்ப முடிவுத்திகதியன்று 56 வயதிற்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் திகதிக்கு முன்னுள்ள 5 ஆண்டு காலப் பகுதியில் சகல சம்பள உயர்வுகளையும் உரிய திகதிகளில் பெற்றிருத் தல் வேண்டும் அத்துடன், எந்த விதமான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்பட்டவராக இருத்தல் ஆகாது.

விண்ணப்பங்கள் யாவும் நவம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக்கிளை, பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்ல' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.(ற-19)

## விமான நிலையத்தில் வல்லுறவு;

## முழு விசாரணைக்கு பிரதமர் உத்தரவு

கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் இளம் பெண் பயணி வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டது தொடர்பாக முழு அளவிலான விசாரணைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள் இனியும் நடக்காமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிடமும் மஹிந்த கடிந்துள்ளதாகத் தெரியவருகிறது.

குவைத் செல்ல இருந்த பெண் பயணியை விமான நிலையப் பாதுகாப்பு உத்தியோகத்தர் உள்ளிட்ட 4 பேர் கொடூரமாக பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினர். இது தொடர்பாக வெல்லாவ பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது இந்தப் புகாரின் பேரில் 4 போ கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் 20 மில்.செலவில் சிறுவர் விடுதி

(சாவகச்சேரி)

"வெறுமனே கட்டடங்கள் மாத்திரம் சேவைசெய்ய முடியாது' எனக் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் சிறுவர்களுக்கான விடுதியின் அடிக்கல் நாட்டு விழாவின் போது உரையாற்றிய வட மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

"இப் புதிய கட்டட அமைப்புக்காக FIDR என்றழைக்கப்படும் ஜப்பான் நிறுவனம் 20 மில்லியன் ரூபாவை வழங்குகிறது. இக் கட்டடத்தின் வேலைகள் ஒரு வருட காலத்துக்குள் முடிவடைந்து விடும். இதில பணியாற்றும் ஊழியர்களுக்கும் இந்நிறுவனமே பயிற்சிகளை வழங்கும்.

இவ் வைத்தியசாலையில் 13 மில்லியன் ரூபா செலவில் புதிய சத்திரசிகிச்சை நிலையம் அமைக்கப்படும். இவ் வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவரும் பொறுப்புடன் செயற்படவேண்டும். சிகிச்சைக்காக வரும் பொது மக்களுடன் அன்பாக நடந்துகொள்ள வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார்.(து-108)

## நித்திய கருமவிதி இலவச விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சமயதீட்சை பெறுபவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இயற்றிய "நித்திய கரும விதி" என்ற நூலை இலவசமாக வழங்க சரசாலை இந்து மாமன்றம் முன்வந்துள்ளது.

சமய தீட்சை நடாத்தும் ஆலயங்கள், தீட்சை பெறுவோரது விபரங்களை மேற்படி மன்றத்தின் செயலாளரான க.சிவசங்கரநாதன் (ஜே.பி.)க்கு அனுப்பி நூலின் பிரதிகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் என மன்றம் அறிவித்துள்ளது. (து)

வாசிப்பு மாதம்

வாசியுங்கள் அகவிழி திறக்கும்

வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!

காசோலை என்றால் அகவிழி என்ற பெயருக்கும் காசுக்கட்டளை எனில் ஹவலக் ரவுனில் மாற்றக் கூடியதாகவும் அனுப்பவும்.

(வருடச் சந்தா ரூ.300 மட்டுமே)

தொடர்புகட்கு:- அகவிழி, இல-03, டொறிங்ரன் அவனியு, கொழும்பு-07.

தொலைபேசி-011 2506272 E-Mail:ahavili@viluthu.org

ஆசிரியர்களுக்கான மாத இதழ்

அகவிழி

ஆசிரியத்துவநோக்கு...

# சச்சின் 26

## மீள்பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை

உண்மையில் அது அரை சதம் மட்டுமில்லை அரைக் கிணறும்தான்! அது சச்சினுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. இன்னும் இரண்டு மணிநேர ஆட்டம் மீதமிருப்பதால் சாதனையின் நிழலில் ஒதுங்கி இளைப்பாற அவனுக்கு நேரம் இருக்கவில்லை. தன் அணியைத் தோல்வியிலிருந்து காப்பாற்ற வேண்டிய கடமை அவன் தோள்களில் சுகமான சுமையாக நிறைந்திருக்க சச்சினின் கவனமான ஆட்டம் தொடர்ந்தது. மறுமுனையில் மனோஜ் பிரபாகரும் சில நல்ல ஷாட்டுகள் விளையாடி சச்சினுக்கு அருமையான ஒத் துழைப்பு தந்தார்.

மாலை நேரம் நெருங்க நெருங்க இங்கிலாந்து அணியின் பதற்றம் அதிகமாகிக் கொண்டிருந்தது. நான்கே நான்கு விக்கெற்றுகள் அதைச் சாய்த்து போட்டியை ஜெயிக்க முடியவில்லையே என்கிற எரிச்சலில் அவர்களின் பந்து வீச்சில் சில தவறுகள் தென்பட



ஆரம்பிக்க சச்சினும் பிரபாகரும் அவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். விறுவிறுவென ஸ்கோர் முன்னேற சச்சின் எண்பது ரன்களைக் கடந்தான்.

அபபோதும கண் முன் இருந்த போட்டியையும் கடந்து சச்சினின் எண்ணங்களை வேறொரு ஞாபகம் ஆக்கிரமித்தது. சில மாதங்களுக்கு முன் நேப்பியரில் நியூஸிலாந்து அணிக்கு எதிரே எண்பத்தெட்டு ரன்களில் அநாவசியமாக ஆட்டம் இழந்ததும் பின்னர் அந்தத் தவறை நினைத்து நினைத்து அழுததும் அவனது நினைவில் தோன்றி உரமூட்டியது. அன்றைய தவறை என்னால் இனிமேல் திருத்தமுடியாது. ஆனால் இன்றைய ஆட்டத்தில் மீண்டும் அப்படியொரு தவறைச் செய்யாமல் இருக்கலாம்.

இன்னும் ஒரு முறை எண்பதுகளில் ஆட்டம் இழக்கப் போவதில்லை என்று தனக்குள் உறுதியாகச் சொல்லிக் கொண்டான் சச்சின் . நான் நிச்சயம் இந்தப் போட்டியில் சதம் அடிப்பேன். அதன் பின்னும் என் கடமை முடிந்துவிடுவதில்லை. எல்லோரும் போய் விட்டாலும் நான் மட்டும் கடைசி வரை ஆட்டம் இழக்காமல் இருந்து என் அணியைக் காப் பாற்றுவேன்.

முடியும் என்று நினைக்கிறவர்கள், நம்புகிறவர்கள் தான் முடிக்கிறார்கள். ஃப்ரேஸர் பந்து வீச்சில் அபாரமான இரண்டு பவுண்டரிகளின் மூலம் தொன்னூறுகளுக்குள் நுழைந்த சச்சின் சீக்கிரமே நூறாவது ரன்னைப் பூர்த்தி செய்தான். நிறைவான சிரிப்புடன் தனது மட்டையை அவன் உயர்த்திக் காட் டிய போது மான்செஸ்டர் மைதானம் மொத்தமும் அந்த இளைஞனை எழுந்து நின்று பாராட்டியது.



அது சச்சினின் ஒன்பதாவது டெஸ்ட் போட்டி. அதுவரையில் அவனை ஒரு சராசரி யான கிரிக்கெற் வீரன் என்றே கணித்திருந்த உலக கிரிக்கெற் நிபுணர்கள் அந்த செஞ் சுரிக்குப் பிறகு தான் மிகுந்த ஆவலோடும் அளவற்ற எதிர்ப்பார்ப்புகளோடும் கவனிக்க ஆரம்பித்தது.

இங்கிலாந்தில் அவன் விளையாடத் துவங்கும் போது கூட, சச்சினைப் பற்றிய பரபரப் புச் செய்திகள் யாவும் அவனது வயதைக் குறிப்பிட்டுத்தான் பாராட்டின. ஏனெனில் மான்செஸ்டர் போட்டிக்கு முந்தைய எட்டுப் போட்டிகளில் சச்சின் முன்னூற்று அறுபத்து ஒன்பது ரன்கள் மட்டுமே எடுத்திருந்தான். சராசரி-30 ரன்களுக்கு சற்றே கூடுதல். நாட்டுக்காக டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிற ஒரு வீரர் சராசரியாக முப்பது ரன்கள் எடுப்பதொன்றும் பெரிய விஷயமில்லை. ஒரு பதினேழு வயதுப் பையன் அதைச் செய்கிறான் என்பதுதான் எல்லோருக்கும் அதிசயமாக இருந்தது. ஆகவே சச்சினைப் பற்றி அலசிய கட்டுரைகள் யாவும் பையன் பரவாயில்லை. வயதானால் இன்னும் நன்றாக விளையாடுவான் என்பது போல் பேசின.

அப்படிப்பட்ட விமர்சனங்கள் அனைத்தையும் தனது முதல் டெஸ்ட் சதத்தின் மூலம் தவிடுபொடி ஆக்கினான் சச்சின். வயதைப் பார்க்காதீர்கள் நான் அதற்கெல்லாம் அப்பாற்பட்டவன் என்று விமர்சகர்களிக் முகத்தில் அடித்துச் சொல்வது போல் அவனுடைய அன்றைய ஆட்டம் இருந்தது. அந்தப் போட்டியையும் சச்சினின் ஆட்டத்தையும் நேரில் பார்த்தவர்கள் சச்சினின் மேதைமை முழுமையாக வெளிப்பட்டது என்று பரவசத்தோடு வர்ணிக்கறார்கள் . உலக கிரிக்கெற அரங்கில் ஒரு கம்பீரமான புதிய நட்சத்திரம் உருவாகி விட்டதை அந்தச் சதம் உரக்க சத்தமிட்டு அறிவித்தது!

அன்றைய ஆட்டநேர இறுதி வரையில் சச்சினும் பிரபாகரும் ஆட்டமிழக்கவில்லை. சச்சின் 119 ரன்களுடனும் பிரபாகர் 67 ரன்களுடனும் பெவிலியனுக்குத் திரும்பியபோது, அணி மொத்தமும் அவர்களைச் சூழ்ந்து கட்டிக்கொண்டது. போட்டி எத்தரப்புக்கும் வெற்றி தோல்வி இன்றி டிராவில் முடிவடைந்தாலும் கௌரவம் மொத்தமும் இந்திய அணிக்கும் சச்சினுக்கும்தான்! முதன் முறையாக ஆட்டநாயகன் விருதும் பெற்றான் சச்சின்!

அதனபின் டெஸ்ட் ஒருநாள் போட்டிகளிச் சச்சின் எவ்வளவோ நூறுகள் அடித்தாயிற்று. ஆனாலும் பதினேழு வயதில் அடித்த அந்த முதல் சதம் மிகவும் விசேஷமானது. ஏனெனில் அணிக்கும் மிகவும் தேவையானபோது கிடைத்த சதம் அது! இன்னும் ஓட்டுப் போடுகிற வயதைக்கூட அடைந்திராத சிறுவன் ஒருவன் தனது நாட்டின் பெருமைக்காகப் போராடி ஜெயித்ததன் நிரந்தர சாட்சி.!

(தொடரும்.)

# குடுலால் இடை நீக்கம்

(கொழும்பு)

சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந்த குடுலால் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந்த குடுலால் போதைப் பொருள் கடத்தல் வழக்குகளில் தொடர்புடையவர் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியானது.

இந்திய அரசாங்கத்தால் தேடப் படும் குற்றவாளியாகவும் குடுலால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தார்.

இதையடுத்து குடுலால் நியமனம் தொடர்பாக விசாரணை நடத்த ஓய்வுபெற்ற நீதிபதி ஆணையத்தை நீதிஅமைச்சர் ஜோன் செனவிரத்ன நியமித்தார்.


இந்த விசாரணையின் அறிக்கையை நவம்பர் 3ஆம் திகதி சமர்ப்பிக்கவும் நீதி அமைச்சர் உத்தரவிட்டிருந்தார். தற்போது நடைபெற்ற விசாரணைகளின் அடிப்படையில் குடுலால் என்ற லால் பிரீஸை சமாதான நீதிபதி பொறுப்பிலிருந்து இடைநீக்கம் செய்வதாக நீதித் துறை அமைச்சு அறிவித்துள்ளது.

சமாதான நீதிபதியாக மக்கள் இயக்கங்களின் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படக்கூடும் என்று தெரிகிறது.

குடுலால் மீது எவ்வித குற்ற வழககுகளும் இல்லை என்று கிராம சேவையாளர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உறுதிமொழிக் கடிதம் அளித்திருந்தனர். பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவும் குடுலாலை பரிந்துரை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)




கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவின் பொதுக் கூட்டமும் நிர்வாக தெரிவும் அண்மையில் இடம்பெற்றது. இதன் போது தலைமை வகித்த தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (படம் :- கல்வியங்காடு நிருபர்)



யாழ். மாவட்ட இயேசு சபை அகதிப்பணி நிறுவனத்தினரால் சாவகச்சேரியைச் சேர்ந்த வலுவிழந்த குடும்பப்பெண்மணி பவளநாயகி என்பவருக்கு மூன்று சில்லு சைக்கிள் வழங்கப்பட்டது. சாவகச்சேரி லகோரியார் ஆலய பங்குத்தந்தை வண. பிதா இரவிச்சந்திரன் அடிகளாரால் சைக்கிள் வழங்கப்படுவதையும் , அருகில் தென்மராட்சி இயேசு சபை அகதிப்பணி இணைப்பாளர் அ. மரியஅன்ரனியையும் படத்தில் காணலாம்.

(படம் :- சாவகச்சேரி நிருபர்)



அண்மையில் நடைபெற்ற அச்சுவேலி மத்திய கல்லூரியின் முத்தமிழ் விழாவில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன், லயன் டாக்டர் வை. தியாகராஜா ஆகியோரை கல்லூரியின் அதிபர் வே. பாலசுப்பிரமணியம் மங்கள வாத்தியங்கள் சகிதம் விழா மேடைக்கு அழைத்துச் செல்லும் காட்சி.

(படம்:-கல்வியங்காடு நிருபர்)

# இரசிகர்களுக்கு பெருவிருந்து அளிக்கப்போகும் இலங்கை - இந்திய அதிரடிஆட்டம்

## போட்டி நடைபெறும் மைதானங்கள் ஒரு பார்வை

*** முதல் போட்டி -நாக்பூர்**

விடார்வகா கிரிக்கெற் கழக மைதானம் 40 ஆயிரம் பேர் போட்டியினைக்காணக் கூடியதாக இம்மைதானம் அமைக்கப்பட்டுள்ளது.

இம் மைதானத்தில் முதல் ஒரு நாள் சர்வதேச போட்டி இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் 1985ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி நடைபெற்றது.

### 250 ஓட்டங்களுக்கு மேல்

348-8 நியூஸிலாந்து எதிர் இந்தியா 1995/96
320-7 தென்னாபிரிக்கா எதிர் இந்தியா 1999/00
310 இந்தியா எதிர் தென்னாபிரிக்கா 1999/00
287-4 இந்தியா எதிர் இலங்கை 1998/99
286-6 பாகிஸ்தான் எதிர் இந்தியா 1986/87
280-3 மேற்கிந்தியா எதிர் இந்தியா 2002/03
279-9 இந்தியா எதிர் மேற்கிந்தியா 2002/03

### 4 விக்கெற்றுக்கு மேல்

6-29 வி.பீற்றர்ஸன் (மேற்கிந்தியா)
4-21 சௌரவ் கங்குலி (இந்),
4-34 ஷேன் வோர்ண் (அவுஸ்),
4-40 ரவி சாஸ்திரி (இந்),

**பெறப்பட்ட சதங்கள்**

130* சௌரவ் கங்குலி (இந்),
116 ராகுல் ராவிட் (இந்),
114 நதேன் அஷ்ரில் (நியூ),
104 அரவிந்த டி சில்வா (இல),
103* சுனில் கவாஸ்கர் (இந்),
103 கிறிஷ்கைல் (மேற்.இந்),
101* ரவி சாஸ்திரி (இந்),

*** இரண்டாவது போட்டி -மொகாலி பஞ்சாப் கிரிக்கெற் கழக மைதானம்.**

1993ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இம் மைதானத்தில் முதல் சர்வதேச ஒருநாள் போட்டி இந்திய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் 1993ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் திகதி நடைபெற்றது.

### 250 ஓட்டங்களுக்கு மேல்

339-4 இலங்கை எதிர் பாகிஸ்தான் 1997
319-6 இந்தியா எதிர் சிம்பாப்வே 2001/02
289-6 இந்தியா எதிர் அவுஸ்திரேலியா 1996/97
285-7 நியூஸிலாந்து எதிர் பாகிஸ்தான் 1997
284 அவுஸ்திரேலியா எதிர் இந்தியா1996/97
263-9 பாகிஸ்தான் எதிர் நியூஸிலாந்து 1997
255 சிம்பாப்வே எதிர் இந்தியா 2001/02

இம் மைதானத்தில் ஒரேயொரு சதமே இதுவரை காலமாக பெற்றபட்டுள்ளது பாகிஸ்தானுக்கு எதிராக நியூஸிலாந்து வீரர் நதன் அஷ்ரில் பெறப்பட்ட 117ஓட்டமே பெறப்பட்ட சதமாகும்.

அத்துடன் அவுஸ்திரேலிய வீரர் ஷேன் வோர்ண் 36 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றினையும் நியூஸிலாந்து வீரர் நதன் அஷ்ரில் 43 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றினையும் இம் மைதானத்தில் கைப்பற்றியுள்ளனர்.

*** மூன்றாவது போட்டி -ஜெய்ப்பூர் சாவோய் மன்சிங் மைதானம்**

இம் மைதானத்தில் இந்தியா பாகிஸ்தான அணிகளுக்கிடையில் 1983 ஆம் ஆண்டு ஓக்டோபர் 2ஆம் திகதி முதல் ஒருநாள் போட்டி நடைபெற்றது.

**இந்திய - இலங்கை அணிகளுக்கிடையில் முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி நாக்பூரில் இன்று நடைபெறுகிறது.**

### 250 ஓட்டங்களுக்கு மேல்

278-9 பாகிஸ்தான் எதிர் இந்தியா 1998/99
269-5 இங்கிலாந்து எதிர் மேற்கிந்தியா 1987/88
259-5 இந்தியா எதிர் மேற்கிந்தியா 1994/95
254 மேற்கிந்தியா எதிர் இந்தயா 1994/95
251-3 இந்தியா எதிர் அவுஸ்திரேலியா 1986/87
250-3 அவுஸ்திரேலியா எதிர் இந்தியா 1986/87

**பெறப்பட்ட சதங்கள்**

111 டி.பூண் (அவுஸ்),
106 டி.குள்ளிநன் (தென்),
105 சச்சின் டெண்டுல்கர் (இந்),
104 ரொட்னி மார்ஷ் (அவுஸ்),
102 சிறிகாந் (இந்),
102 ரிக்கி பொண்டிங் (அவுஸ்),
100* வினோத் காம்பிளி (இந்),

இம் மைதானத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா பெற்ற 135 ஒட்டங்களுக்களே அதிகுறைந்த ஓட்ட எண்ணிக்கையாகும்.

இந்திய வீரர்களான ராஜு 46 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றினையும், அனில் கும்ளே 53 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றினையும் இம்மைதானத்தில் கைப்பற்றியுள்ளனர்.

*** நான்காவது போட்டி -பூனே நேரு மைதானம்**

25 ஆயிரம் பேர் போட்டியினைக் காணக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ள இம் மைதானத்தில் முதல் இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் 1984ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி முதல் போட்டி நடைபெற்றது.

### 250 ஓட்டங்களுக்கு மேல்

286-6 இந்தியா எதிர் இலங்கை 1998/99
259-8 அவுஸ்திரேலியா எதிர் நியூஸிலாந்து 2003/04
258-9 நியூஸிலாந்து எதிர் அவுஸ்திரேலியா 2003/04

**பெறப்பட்ட சதங்கள்**

133* மார்க் வோவ் (அவுஸ்),
115* எம் ஹற்றிங் (இங்),
105 திலிப் வெங்வுர்கார் (இந்),
103 கிறிஸ் கெய்ன்ஸ் (நியூ),
103* அஜெய் ஜடேஜா (இந்),
100 ஹேமிங் படானி (இந்),

அவுஸ்திரேலிய வீரர் வில்சியம்ஸ் 53 ஓட்டங்களுக்கு 5 விக்கெற்றினையும் நியூஸிலாந்து வீரர் டரன் ரஃப்பி 30 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றினை இம் மைதானத்தில் வீழ்த்தியுள்ளனர்.

*** ஐந்தாவது போட்டி - அஹமதாபாத் சடேர் பட்டேல் மைதானம்**

1982ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இம் மைதானத்தில் 48 ஆயிரம் பேர் போட்டியினை கண்டுகளிக்கின்றனர். இம் மைதானத்தில் முதல் போட்டி இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் 1996ஆம் ஆண்டு ஒக்டோபர் 5 ஆம் திகதி நடைபெற்றது.

### 300 ஓட்டங்களுக்கு மேல்

325-5 இந்தியா எதிர் மேற்கிந்தியா 2002/03
324-4 மேற்கிந்தியா எதிர் இந்தியா 2002/03
319-07 பாகிஸ்தான் எதிர் இந்தியா 2004/05
315-6 இந்தியா எதிர் பாகிஸ்தான் 2004/05
306-5 இந்தியா எதிர் சிம்பாப்வே 2000/01

**பெறப்பட்ட சதங்கள்**

144 சௌரவ் கங்குலி (இந்),
140 கிறிஸ் கைல் (மேற்கிந்),
123 சச்சின் டெண்டுல்கர் (இந்),
109* ராகுல் ராவிட் (இந்),
102 ஏ.காம்பெல் (சிம்),
101 நதேன் அஷ்ரில் (நியூ),

*** ஆறாவது போட்டி -ராஜ்கொட் மட்காவறோ ஷண்டியா கிரிக்கெற் மைதானம்**

இம் மைதானத்தில் இந்தியா அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் 1986ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி முதல் போட்டி நடைபெற்றது.

### 300 ஓட்டங்களுக்கு மேல்

349-9 நியூஸிலாந்து எதிர் இந்தியா 1999/00
306 இந்தியா எதிர் நியூஸிலாந்து 1999/00
301-6 இந்தியா எதிர் சிப்பாப்வே 2000/01
300-5 மேற்கிந்தியா எதிர் இந்தியா 2002/03

**பெறப்பட்ட சதங்கள்**

120 நதேன் அஷ்ரில் (நியூ),
114* வீரேந்தர் சேவாக் (இந்),
110* வி.விசியன் றிச்சர்ட்ஸ் (மேற்கிந்),
108 என்.சித்து (இந்),
102 ஆர்.லம்வா (இந்),

*** ஏழாவது போட்டி-வதோதரா ஐ.பி.சி.எல் விளையாட்டு மைதானம்**

இம் மைதானத்தில் முதல் போட்டியாக இந்தியா, நியூஸலாந்து அணிகளுக்கிடையில் 1994ஆம் ஆண்டு ஒக்டோபர் 28ஆம் திகதி நடைபெற்றது.

### 280 ஓட்டங்களுக்கு மேல்

307-8 நியூஸிலாந்து எதிர் நெதர்லாந்து 1995/96
291-5 மேற்கிந்தியா எதிர் இந்தயா 2002/03
290-8 இந்தியா எதிர் மேற்கிந்தியா 2002/03

**நோயல்**




283-6 இந்தியா எதிர் தென்னாபிரிக்கா 1999/00
282-5 தென்னாபிரிக்கா எதிர் இந்தியா 1999/00

**பெறப்பட்ட சதங்கள்**

122 சச்சின் டெண்டுல்கர் (இந்),
115 சச்சின் டெண்டுல்கர் (இந்),
108 ஆர்.நுதர் போர்ட் (நியூ),
101 கிறிஸ் கைல் (மேற்கிந்),

(முற்றும்)

# ஒப்பந்தக்காரர்கள் முன்வராததால் அபிவிருத்தி வேலைகள் அனைத்தும் முடக்கம்

## முல்லைத்தீவு அரசாங்க அதிபர் கவலை

(முல்லைத்தீவு)

"முல்லைத்தீவு மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் ஆயத்தமாக இருக்கின்ற போதிலும் இங்கே திட்டங்களை நிறைவேற்ற ஒப்பந்தகாரர்கள் முன்வராததால் சகல அபிவிருத்தியும், முடக்கப்பட்டுள்ளதையிட்டு, 'கவலையடைகின்றேன்" இவ்வாறு மாவட்ட திட்டமிடல் இணைப்புக் கூட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றபோது அதனைத் தொடக்கிவைத்து தலைமையுரையாற்றுகையில், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமல்டா சுகுமார் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

பின்தங்கிய பிரதேசமாகிய இம்மாவட்டம் ஏற்கனவே இராணுவ நடவடிக்கைகளாலும் இப்போது சுனாமியினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆதனாலேதான் இம் மாவட்டத்தின், அபிவிருத்திக்காக நான் 30இற்கு மேற்பட்ட திட்டங்களை, அமுல்ப்படுத்த உள்ளேன். ஆனால் இவற்றை நிறைவேற்ற பத்திரிகை மூலமாக விளம்பரங்கள், செய்யப்பட்ட போதிலும், தனிப்பட்ட ஒப்பந்தகாரர்களோ, நிறுவனங்களோ, முன்வர மறுப்பதால், குறிப்பிட்ட வேலைத்திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை எனக் கவலை தெரிவித்ததுடன் சகல திணைக்களங்களும் இவ் விடயத்தில் அக்கறை செலுத்தி ஒப்பந்தகாரர்களை ஊக்குவித்து திட்டங்களை நிறைவேற்ற முன்வரவேண்டுமென அழைப்புவிடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில், மாவட்ட இணைப்புக் கூட்டங்கள் அந்தந்த மாவட்டத்திலேதான், நடைபெறுவது வழக்கம் ஆனால் இதனை, பிரதேச ரீதியாக நடாத்துவமாறு, பிரதேச செயலாளகளால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பேரிலேயே நான் பிரதேச ரீதியாக இக் கூட்டத்தைக்கூட்டி மக்களின் குறைகளை நேரடியாகவே அறிய தீர்மானித்துள்ளேன். அதன் அடிப்படையிலே தான் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் இக் கூட்டம் நடைபெறுகின்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு நகரத்தில் உள்ள, மூன்று பாடசாலைகளை, கடல் வலயத்துக்கு அப்பால் கட்டுவதற்கு காணிகள் தெரிவு செய்யப்பட்டு விட்டதாகவும் 5900 வீடுகளை கட்டித்தர அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வந்துள்ளதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளார்கள் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

எனது மாவட்டத்திலே ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகள் இருக்கின்றது. நான் சகல பிரிவுகளையும் சமமாகவே கருதுகின்றேன். வேலைத்திட்டங்களையெல்லாம் சமமாகவே பங்கிடுகின்றேன். இங்கே இவ்வாண்டுக்குரிய வேலைகள் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. அதனால் பெருந்தொகையான, நிதி திரும்பும் அபாயநிலை உள்ளதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

முல்லைத்தீவு நகரம் ஒரு கடற்தொகுதி வலயம் கடற்தொழிலாளர்களுக்கு முக்கியமாக சேவை செய்யவேண்டியது. கடற்தொழில் திணைக்களம். ஆனால் இத் திணைக்களத்தின் அதிகாரி கடந்த 6 மாத காலமாக கடமைக்கு வராததால் தொழிலாளர்களுக்காக திணைக்கள உதவிகள் அனைத்தும் முடக்கப்பட்டிருப்பதாகவும், அவர் சுட்டிக்காட்டினார்.

இக் கூட்டத்துக்கு முன்னதாக அரசாங்க அதிபராலும், பிரதேச செயலாளர்களாலும், திட்டப்பணிப்பாளராலும் தென்னங்கன்றுகள் நாட்டிவைக்கப்பட்டது.

பிரதேச செயலாளர்கள் திட்டப்பணிப்பாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சகல திணைக்களங்களின் அதிகாரிகள் உட்பட பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். (து-128)

# புதிய அதிபர் நியமனம்

(கோண்டாவில்)


கடந்த 8 மாத காலமாக அதிபர் இன்றி இயங்கிவந்த உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திற்கு நல்லையா சிவகடாட்சம் நவம்பர் மாதம் 1ஆம் திகதியிலிருந்து அப்பாடசாலையின் அதிபராக நியமிக்கப்படவுள்ளார்.

முன்னர் இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய சு.யோகராஜா 22.02.2005இல் திருகோணமலைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே ந.சிவகடாட்சம் நியமிக்கப்படவுள்ளார்.

இவ் எட்டு மாதங்களும் வித்தியாசாலையின் உப அதிபர் திருமதி ப.தியாகலிங்கம் வித்தியாசாலையை நிர்வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (து-36)

# நியூ.-தென் ஆபிரிக்கா தொடர்

# முதல் ஒருநாள் போட்டியில் தென் ஆபிரிக்கா அணி வெற்றி




நியூசிலாந்து தென் ஆபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டியில் தென் ஆபிரிக்க அணி வெற்றிபெற்றுள்ளது.

நியூசிலாந்து- தென் ஆபிரிக்க அணிகளுக்கிடையிலான ஐந்து ஒருநாள் கிரிக்கெட் போட்டி கொண்ட தொடரின் முதல நாள் ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்படுத் தாடியது. நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் நியூசிலாந்து அணி 8விக்கெற் இழப்பிற்கு 249 ஓட்டங்களை எடுத்தது. இவ்வணி சார்பாக மக்மிலன் 66 ஓட்டங்களையும், பிளிமங் 45 ஓட்டங்களையும் அதிகபட்சமாக எடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்கா அணியின் விக்கெற்றுக்கள் அடுத்தடுத்து விழுந்தன. டிப்பென்னர்-10, சிமித்-19, பிரின்ஸ்-31, கிப்ஸ்-25 ஓட்டங்களுடனும், கலிஸ் ஓட்டம் எதுவும பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

தென் ஆபிரிக்க அணி 40 ஓவர்கள் முடிவில் 6 விக்கெற் இழப்பிற்கு 182 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் 7ஆவது விக்கெற்றுக்காக இணைந்த கெம்ப்-பொலக் சோடி சிறப்பாக ஆடி வெற்றிப் பாதைக்கு அணியை அழைத்துச் சென்ற நிலையில் 49 ஆவது ஓவரில் பொலக்-37, கெம்ப்-73 ஓட்டங்களுடனும், அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில் தென் ஆபிரிக்கா அணி 49.3 ஓவர்களில் 8 விக்கெற் இழப்பிற்கு 250 ஓட்டங்களை எடுத்து நியூசிலாந்து அணியை வெற்றி கொண்டது. (அ-19)



மெக்சிகோ, கவுடலஜரா நகரில் நடந்த கால்பந்து லீக் போட்டியில் அட்லஸ் வீரர் கில்லர்மோ ரோட்ரீக்ஸ (இடது) டோர்டஸ் அண' வீரர்கள் அர்டடோ பாடில்லா (நடுவல), செபஸ்டியன் அப்ரு இருவரும் பந்தை தட்டிச் செல்ல முனையும் அற்புதக் காட்சி.

# ஏதிரணிக்கு அபாயகரமான பந்து வீச்சாளராக பிளின்ரொப் - கருத்துக் கணிப்பு தெரிவிப்பு




எதிரணிக்கு மிகவும் அபாயகரமான துடுப்பாட்ட வீரர் மேற்கிந்தியத் தீவின் லாரா எனறு அவுஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட கருத துக் கணிப்பில் தகவல் வெளியாகி உள்ளது.

அவுஸ்திரேலியாவில் வெளியாகும் ஒரு பத்திரிகை சார்பில் அங்குள்ள வீரர்களிடம் சர்வதேச கிரிக்கெட் வீரர்களில் சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த துடுப்பாட்ட வீரர், அபயாகரமான துடுப்பாட்ட வீரர், அபாயகரமான பந்து வீச்சாளர், சிறந்த நடுவர் யார்? என்பது பறறி கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.



இதில் எதிரணிக்கு மிகவும் அபாயகரமான துடுப்பாட்ட வரராக லாரா தேர்ந்தெடுக்கப்பட்டார். 55 சதவீதம் பேர் அவருக்கு ஆதரவாக வாக்களித்து உள்ளனர். டெண்டுல்கா 25 சதவீதமும், ராவிட் 23 சதவீதமும் வாக்குப் பெற்றனர்.



இங்கிலாந்து பந்து வீசசாளர் பிளின்ரொப் எதிரணிக்கு மிகவும் அபாயகரமான பந்து வீச்சாளராக கருத்துக் கணிப்பில் முடிவாகியுள்ளது. சிறந்த துடுப்பாட்ட வீரராக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ரிக்கி பொண்டிங்கும் சிறந்த பந்துவீச்சாளராக ஷேன் வோர்னும் தோவாகியுள்ளனர்.



சிறந்த நடுவராக தென ஆபிரிக்காவை சேர்ந்த ரூடி கோர்ட்சென் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். (அ-19)



கிழக்கு ஜேர்மனி, ஹாலே நகரில் நடந்த 'டபிள்யு,.பி.ஓ., லைட் ஹெவிவெயிட் குத்துச்சண்டைப் போட்டியில, ஹங்கேரியின சோல்ட் எர்டி (தாக்குதலுக்கு) நிலைகுலைகிறார் பிரான்சின் மெக்தி ஷகோன. இந்தப் போட்டியில் எர்டி வெனறு சம்பியன் பட்டத்தைத தட்டிச் சென்றார்.

# இலங்கை- இந்திய தொடர் நாக்பூரில் இன்று ஆரம்பம்

இளமை ததும்பும் இந்திய அணிக்கும் இலங்கை கிரிக்கெட் புலிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

இந்தியா சென்றுள்ள இலங்கை அணி 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில வளையாடவுள்ளது. முதல் மோதல் நாக்புரில் இன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் இந்திய அணியில் நீண்ட காலத்திற்குப் பிறகு முழங்கை காயம பூரணமாக குணமடைந்த நிலையில் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் களமிறங்குகிறார்.

சரியான ஆரம்பத் துடுப்பாட்ட சோடி இல்லாததனால் மிகப்பெரிய ஓட்ட எண்ணிக்கை எடுக்கமுடியாமல் தடுமாறிய இந்திய அணிக்கு சச்சின் வருகை ஆறுதல் அளிததுள்ளது. இந்திய அணியில் இம்முறை இளம் வீரர்களின் அதிக்கமே அதிகம் காணப்படுகின்றது.

கேரளாவைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளா ஸ்ரீ சாந்த் முதல் முறையாக சர்வதேச ஒருநாள் போட்டியில் வாய்ப்புப் பெற்றுள்ளார். இவரைத் தவிர, ருத்ர பிரதாப் சிங், ஜெய பிரகாஷ் யாதவ், ரெய்னா எனப் பல புது முகங்கள் இடம்பெற்றுள்ளனர்.

காயம காரணமாக சவுரவ் கங்குலி இடம் பெறாததால் கப்டன் பதவியைப் பெற்றுளள ராகுல் ராவிட் தனது திறமையை நிரூபிக்க இத்தொடர் வாய்ப்பாகவுள்ளது.

இந்நிலையில், எட்டு ஆண்டுகளுக்குப் பின் இந்தியா சென்றுள்ள இலங்கை அணியும் மிகவும பலமான நிலையிலேயே உள்ளது. (அ-19)

# உதயதாரகை அணி வெற்றி

(வல்வெட்டித்துறை)

சக்தி எவ்.எம், சக்தி ரி.வியின் 7வது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் மாவட்ட சம்பியனான வல்வெட்டித்துறை உதயதாரகை அணி அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படும் போட்டிக்காக கொழும்பு செல்லவுள்ளது.

மாவட்ட ரீதியில் நடைபெற்ற இந்த இறுதிப்போட்டியில் ஆனைக்கோட்டை ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட உதயதாரகை அணி 19 ஒட்டங்களால வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (து-32)

# தென்மராட்சி கல்வி வலய உதைபந்தாட்டப் போட்டி முடிவு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்படட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப்போட்டி கடந்த் 21 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு பிரதம விருந தினராக முன்னாள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் க.கயிலைநாதன் கலந்து கொண்டார். மற்றும் பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் கலந்துகொண்டார்கள்.

இப்போட்டியின் முடிவுகள் வருமாறு,

**13 வயதுப் பிரிவு**

முதலாம் இடம் : சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
இரண்டாம் இடம் : மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
மூன்றாம் இடம் : வரணி மகாவித்தியாலயம்.

**14 வயதுப் பிரிவு**

முதலாம் இடம் : சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
இரண்டாம் இடம் : வரணி மகாவித்தியாலயம்.
மூனறாம் இடம் : கொடிகாமம் திருநாவுக கரசு மகா வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

முதலாம் இடம் : சாவகச்சேரி இந்துக் கல லூரி.
இரண்டாம் இடம் : மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
மூன்றாம் இடம் : வரணி மகாவித்தியாலயம்.


**18 வயதுப் பிரிவு**

முதலாம் இடம்:- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
இரண்டாம் இடம் :- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.
மூன்றாம் இடம் :- கைதடி முத்துக்குமார சாமி மகா வித்தியாலயம். (த,19,108)



இப்போட்டியின் நான்கு பிரிவிலும் வெற்றி பெற்ற சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் நான்கு பிரிவு அண'களின் அணித் தலைவர்களையும், பயிற்றுவிப்பாளர்களையும் பாடசாலை அதிபரையும் படத்தில் காணலாம்.

# துலீப் டிராபி ஆட்டத்தில் சதம் அடித்தார் கங்குலி



மோசமான ஆட்டம், உடல் தகுதியின்மையால் இந்திய அணியில் கப்டன் பதவியை பறிகொடுத்திருப்பவர் சவுரவ் கஙகுலி. இலங்கை தொடருக்கான முதல் இரண்டு போட்டிகளில் இவர் சேர்த்துக கொள்ளப்படவில்லை. உள்ளூரில் திறமையை நிரூபித்தால்தான் இனி வாய்ப்பே கிடைக்கும் என தேர்வுக்குழு மிரட்டியதால் வேறு வழியின்றி நீண்ட இடைவெளிக்குப் பிறகு துலீப் டிராபி தொடரில் விளையாடினார். கிழக்கு மண்டல அணியின் கபடனாக களமிறங்கிய இவர், தனது ஆக்ரோஷத்தை ஆட்டத்தில் காட்டினார்.

வடக்கு மண்டலத்துக்கு எதிரான முதல் இன்னிங்சில் கங்குலி சதம் அடித்ததோடு நான்கு விக்கெற்றுக்களையும் வீழ்த்த, இவரது அணி 9 விக்கெற் வித்தியாசத்தில வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து ராஜ்கோர்டிலிருந்து தனது சொந்த ஊரான கொல்கத்தாவிற்கு நேற்று முன்தினம் வந்தார். 'வந்தவுடனே, சதம் அடிச்சிடடீங்க... இனி இந்திய அணியில் நீங்கள் இடம்பெறுவது உறுதிதானே என கங்குலியிடம் பத்திரிகையாளர்கள் கேட்டபோது,

துலீப் டிராபியில் எனது ஆட்டத்தை பற்றி கருத்துக் கூற விரும்பவில்லை. எந்த ஒரு வீரருக்கும் சிறப்பாக விளையாடினால் திருப்தியாகத்தான் இருக்கும். அந்தவகையில் சதம அடித்தது மகிழ்ச்சி அளிககிறது. அதிலும் எனது சதம் அணியின் வெற்றிக்குக காரணமாக இருந்தது என்பதால் அதிக சந்தோஷமாக இருக்கிறேன். மற்றபடி இந்த சதத்தால் அணியில் மீண்டும் இடம் கிடைக்குமா என்பது பற்றி எல்லாம் பதில் சொல்ல விரும்பவில்லை எனத் தெரிவித்தார். (அ-19)

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு-2005

(நேற்றைய தொடர்ச்சி)

**நல்லூர் உதவி அரசஅதிபர் பிரிவு**

70.யா/ந/1385திரு.சண்முகம் இராமநாதன்
71.யா/ந/1413திருமதி.மனோன்மணி சண்முகவேல்
72.யா/ந/1456திரு.குப்புசாமி நாகப்பு
73.யா/ந/1516திருமதி.மகேஸ்வரி வேலாயுதபிள்ளை
74.யா/ந/1520திரு.அய்யாத்துரை நாகரத்தினம்
75.யா/ந/1530திரு.செல்லையா இராசலிங்கம்
76.யா/ந/1531திரு.கந்தையா சண்முகசுந்தரம்
77.யா/ந/1569திரு.செல்லையா பாலசுப்பிரமணியம்
78.யா/ந/1584திரு.சிவசம்பு கந்தசாமி
79.யா/ந/1588திரு.சங்கரி கந்தசாமி
80.யா/ந/1601திரு.செல்வராசா மகாலிங்கம்
81.யா/ந/1620திருமதி.மங்களேஸ்வரி கதிரவேல்
82.யா/ந/1640திரு.முருகப்பா பழனியப்பன்
83.யா/ந/1645திருமதி.புனிதசீலி பரமேஸ்வரன்
84.யா/ந/1648திருமதி.பார்வதி நடராசா
85.யா/ந/1662திருமதி.கெங்காதேவி இரத்தினசிங்கம்
86.யா/ந/1682திரு.சுப்பிரமணியம் சற்குணம்
87.யா/ந/1685திருமதி.சொர்ணபவானி சண்முகலிங்கம்
88.யா/ந/1728திரு.குமாரசாமி தர்மலிங்கம்
89.யா/ந/1737திரு.ஏகாம்பரம் தெய்வேந்திரராசா
90.யா/ந/1748திரு.ஐயாத்துரை வேலாயுதபிள்ளை
91.யா/ந/ 1805திருமதி.இரத்தினம் நல்லையா
92.யா/ந/1810திரு.வல்லிபுரம் இரத்தினசபாபதி
93.யா/ந/1925திரு.சுந்தரம் முத்தையா
94.யா/ந/1946திரு.கந்தையா நாகராசா
95.யா/ந/1963திரு.நடராசா பத்மநாதன்
96.யா/ந/1972திருமதி.பரமேஸ்வரி கனகசுந்தரம்
97.யா/ந/1978திரு.கந்தையா பேரம்பலம்
98.யா/ந/1983திரு.வல்லிபுரம் பொன்னுச்சாமி
99.யா/ந/2045திரு.இரத்தினசபாபதிக்குருக்கள் சந்தான கோபாலசர்மா
100.யா/ந/2046திருமதி. சரஸ்வதி தம்பிராஜா
101.யா/ந/2052திரு. நடராசா சச்சிதானந்தன்
102.யா/ந/2109திரு. பொன்னு வைத்திலிங்கம்
103.யா/ந/2114திரு. பொன்னுத்துரை அன்ரனிப்பிள்ளை
104.யா/ந/2117திரு. கந்தையா அன்னலிங்கம்
105.யா/ந/2152திருமதி. கனகம்மா நல்லையா
106.யா/ந/2166திரு. நடராசா கந்தசாமி
107.யா/ந/2167திரு. ஆறுமுகம் கந்தையா
108.யா/ந/2172திருமதி. கண்மணி தவரத்தினம்
109.யா/ந/2181திரு. நாகலிங்கம் குணசிங்கம்
110.யா/ந/2189திரு. சுப்பிரமணியம் லோகதாசன்
111.யா/ந/2197திரு. இரத்தினராசா மகேஸ்வரன்
112.யா/ந/2199திரு. இராமநாதன் மகேசன்
113.யா/ந/2202திரு. சின்னத்துரை மகாதேவா
114.யா/ந/ 2218திரு. கந்தசாமி இராசரத்தினம்
115.யா/ந/2243திருமதி. பரமயோகம் கார்த்திகேசு
ஒரு ஆள் கையில் ஒரு விலாசம் எழுதிய பேப்பரைக் கையில் வைத்துக்கொண்டு அதில் உள்ள வீடு எங்கேயிருக்கிறது என்று தேடிக்கொண்டிருந்தார். அதில் விலாசம் எழுதிக் கொடுத்தவர் ஏதோ அவசரத்தில் கிறுக்கிக் கொடுத்திருக்கிறார். ஒன்றும் புரியவில்லை.வழியில் போகிறவர்களிடம் அதைக் காட்டி விசாரித்தார். யாருக்கும் எழுத்துப் புரியவில்லை.

இந்த ஆள் யோசித்தார். அங்கேயும் இங்கேயும் பார்த்தார். ஒரு சிறிய மருத்துவமனை கண்ணில்பட்டது. புத்திசாலித்தனமாக நேராக அங்கே போனார். அங்கிருந்தவரிடம் கொடுத்தார். அவர் பேப்பரை வாங்கி அப்படியும் இப்படியும் உற்றுப் பார்த்தார். அதன் பின்னர் இவரைப்பார்த்து " போத்தல் கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்றாராம்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# ரணில் தான் ஜனாதிபதியென மக்கள் ஏற்கெனவே முடிவு செய்துவிட்டார்கள்

## சண்டே லீடருக்கு திஸ்ஸ அத்தநாயக்க பேட்டி

(கொழும்பு)

"நாட்டின் பெரும்பான்மை வாக்காளர்கள் தமது அடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என முடிவு செய்திருக்கிறார்கள். தென்னிலங்கை மக்களின் வாக்குகள் மட்டுமன்றி மலையக வாக்குகளும், வடக்கு-கிழக்கின் வாக்குகளும், முஸ்லிம்களின் வாக்குகளும் அவருக்கே கிடைக்கவிருக்கின்றன.எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவராக அவர் மட்டுமே விளங்குகின்றார். அதுமட்டுமன்றி பரவலான சர்வதேச செல்வாக்கும் ரணிலுக்குள்ள மேலும் ஒரு முக்கிய தகைமையாகும். அவர் பிரதமராக இருந்த காலத்தில் எடுத்த முக்கிய தீமாணங் கள் அவரின் வெற்றிக்கு உறுதுணையாயுள்ளன".

இவ்வாறு ஐ.தே.க பிரதி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சண்டே லீடர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

முன்னர் பிளவுபட்டிருந்த நாட்டை 2002 பெப்ரவரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து ஒன்றிணைந்த நிலைக்கு ரணில் கொண்டுவந்தார். இன்றைய பிரதமர் ஜே.வி.பியுடனும்,ஹெல உறுமயவுடனும் ஒப்பந்தம் செய்துகொண்டு ஒற்றையாட்சியை கொண்டு வருவேன் என்கிறார். இதன் மூலம் மீண்டுமொரு தடவை நாட்டைப் பிரிக்க முயற்சிக்கப்படுகிறது. இனவாதக் கட்சிகளின் நடவடிக்கைகள் தனி நாட்டைக் கோரும்படி புலிகளை நிர்ப்பந்திக்கின்றன. ஒரு சமஷ்டி ஆட்சிமுறை மூலம் ரணில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவுள்ளார்.

சர்வதேச சமூகம் இதனை அங்கீகரித்துள்ளது. சுதந்திரக் கட்சியும், ஐ.தே.கவும் சமஷ்டித் தீர்வை ஏற்றுக்கொண்டுள்ளன. இக்கட்சிகள் இணைந்து இதற்கான தீமானம் செய்த பின் புதிய அரசியல் யாப்பொன்றின் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படும்.

இன்று ஜனாதிபதிக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையே பாரிய பிளவு ஏற்பட்டுள்ளது. ஜே.ஆர். ஜனாதிபதியாகவிருந்த போதும் அன்றைய பிரதமர் பிரேமதாசவுக்குமிடையே கருத்து வேறுபாடு இருந்ததுண்டு. ஆனால் இன்றைய பிரதமர் தனது தலைவியாகிய ஜனாதிபதியைப் புறக்கணித்து விட்டுச் செயலாற்றுவது போலச் செயற்படவில்லை என மேலும் தெரிவித்தார். (து-6)

# வ. செ. திட்டத்தில் மஹிந்தவின் சிந்தனைகள் ஆராயப்பட்டு வருவதாக நிதியமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

மஹிந்தவின் சிந்தனைகளை நிதியமைச்சு தொடர்ந்தும் ஆராய்ந்து வருகிறது எனவும் அவற்றை எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட முடியுமா எனப் பரீட்சித்து வருவதாகவும் நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நவம்பர் 8ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. மஹிந்தவின் பிரதான பிரசார ஒழுங்கமைப்பாளரான மங்கள சமரவீரவும்,விமல் வீரவன்சவும் மஹிந்தவின் உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்த வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்படும் எனக் கூறியுள்ளனர்.

சகல வாக்குறுதிகளையும் ஒரு வருடத்தினுள் செய்து முடித்துவிட முடியாது. அவை பொருத்தமான காலத்தில் நிறைவேற்றப்படும் எனத் தொடர்ந்து கூறிய நிதியமைச்சர் சரத் அமுனுகம மஹிந்தவின் சிந்தனைகள் வரவு செலவுத் திட்டத்தினுள் உள்ளடக்கப்படுவது தொடர்பில் ஜனாதிபதியின் கருத்துக்கள் என்ன? என்பது பற்றி தமக்கு எதுவும் தெரியாது. ஆனால் வரவு செலவுத் திட்டம் தயாரித்து முடிந்ததும் அது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டு அதன் பின்னரே சபையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் இது ஜனாதிபதியின் அரசாங்கம். அதை ஜனாதிபதியே பார்வையிட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நவம்பர் 8ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட இருப்பதற்கான காரணம் பற்றி அவரிடம் கேட்ட போது அன்று சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டு தேர்தலின் பின் நவம்பர் 22ஆம் திகதி தொடக்கம் விவாதிக்கப்படுமெனவும் இதற்கு சட்டமா அதிபர் அனுமதியளித்துள்ளதாகவும் கூறினார். (து-6)

# ஜனாதிபதியான பின் புலிகளுடன் இணைந்து நாட்டைப் பலப்படுத்துவாராம் ரணில்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வு மக்களின் அனுமதியுடனேயே நடைமுறைப்படுத்தப்படுமென எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



புத்தளம் ஹெக்கிராவப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் பிளவுபட்டால் நாடு பிளவுபடும். நாம் இணைந்தால் நாடு இணையும். மாவட்ட சபை மூலம் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை மாகாண சபை வரை சென்று மாகாண சபை மூலம் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை தேசிய பிரச்சினையாக மாறி இன்று அது பாரதூரமாக அமைந்துள்ளது. இது நீண்டு சென்றால் நாடு பிளவுபடும் . அதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

தேர்தலின் பின்னர் நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடாத்துவேன். நாம் ஒன்றிணைந்து புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடாத்தி தீர்வைத் தேடுவோம் எனக் கூறுவோம். அந்தத் தீர்வு நாட்டின் இறைமையைப் பாதுகாத்து நாட்டைப் பிரிக்காத வகையில் அமையும் .

வடக்கு-கிழக்கு உள் விவகார செயற்பாடுகளுக்கு நிர்வாகத்துகான இடத்தை வழங்கி அரச அதிகாரத்தில் புலிகளையும் இணைத்துக்கொண்டு நாட்டை ஒன்றிணைத்து பலப்படுத்தவேண்டும். அரசியல் தீர்வைக்காண வேண்டும். இதனை மக்கள் முன் வந்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதே எமது விருப்பமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.(த-8)

# ஓய்வூதிய மோசடிகளால்— வருடாந்தம் ரூ. 1கோடி நஷ்டம்

இறந்தவர்கள் பேரிலான ஓய்வூதிய சுருட்டல் காரணமாக திணைக்களத்திற்கு ஆண்டுதோறும் ஒரு கோடி நஷ்டம் ஏற்படுவதாக ஓய்வூதியப் பணிப்பாளர் கே.எ. திலகரத்தின தெரிவித்துள்ளார்.

இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளில் உறவினர்கள் மட்டுமன்றி பிரதேச செயலகம் ,தபால் திணைக்களம், வங்கிகள் என்பவற்றின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் ஈடுபட்டுவந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு உள்நாட்டில் 20 ஆயிரம் பேர் வரை போலிச் சான்றிதழ்களை சமர்ப்பித்து ஓய்வூதியம் பெற்றுவருகின்றமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதைத்தவிர இறந்தவர்கள் வெளிநாட்டில் வாழ்வதாக போலிச் சான்றிதழைச் சமர்ப்பித்து ஓய்வூதியம் பெற்று வருகின்றமையும் தெரியவந்துள்ளது.

வெளிநாட்டு வங்கிகள் ஊடாக ஓய்வூதியம் பெறுவோர் 5 ஆயிரம் பேர் வரை இருக்கின்றார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

# சப்புகஸ்கந்தவில் 795 மில்.டொலரில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்

## அமைக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

சப்புகஸ்கந்தவில் 795 மில்லியன் டொலர் மதிப்பிலான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த நிலையம் மூலம் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் பரல் பெற்றோலியம் உற்பத்தி செய்ய முடியும் என்று அரசாங்கம் கருதுகிறது.

சப்புஸ்கந்த புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கும் பணிகள் குலோபல் எனர்ஜி இண்டஸ்டிரியல் என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் ராகம வைத்தியசாலையில் 250 மில்லியன் ரூபாய் மதிப்பிலான விபத்து சிகிச்சைப் பிரிவை உருவாக்கவும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

கொழும்பு- கட்டுநாயக்க நெடுஞ்சாலையில் ஏற்படும் வீதி விபத்துக்களில் காயமடைந்தோர் நீர் கொழும்பு அல்லது தேசிய வைத்தியசாலைக்கு தற்போது அழைத்துச் செல்லப்படுகின்றனர். ராகமவிலும் விபத்து சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டால் இது தொடர்பிலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படும் என்று நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார். (ற)

# கல்வித் தர விருத்தியும் பாடசாலை நூலகங்களும்

உலகமயமாக்கலுக்கு ஏற்ற வகையிலும், எமது தேசிய பொருளாதாரத்தை வலுவடையச் செய்யும் வகையிலும் கல்வியை சீர்செய்ய வேண்டியது எமது பொறுப்பாகும். இவற்றுக்கு உரமூட்டும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையும் குறிப்பிட்ட சில நாட்களைத் தெரிவுசெய்து வலுவூட்டி உலகம் பூராகவும் அந்நாட்களில் அது சார்ந்த பணிகளையும் செயற்றிட்டங்களையும் வியாபகமடையச் செய்வது சொல்லித் தெரியவேண்டியதொன்றல்ல.

அந்த வகையிலே அக்டோபர் மாதத்தில் வரும் நாலாவது திங்கட்கிழமையை உலகப் பாடசாலைகளின் நூலக தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த வகையில் 2001ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியாவிலும், இலங்கையிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. 2002 ஒக்டோபர் 25ஆம் திகதி திங்கட்கிழமை அனுராதபுரம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாக் கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து

> இன்றைய சமூகம் தகவல் மற்றும் அறிவு சார்ந்ததாக மாறிக்கொண்டு வருகின்றது. பொறுப்புணர்ச்சியுள்ள மக்களாக வாழ்வதற்கு மாணவர்கட்கு வழிசமைக்கும் வண்ணம் பாடசாலை நூலகமானது வாழ்நாள் கல்வித் திறன்களையும் கற்பனைத் திறன்களையும் அவர்கட்கு வழங்குகின்றன.
> -யுனஸ்கோ அறிக்கை

கொண்ட அக்காலப் பாடசாலைக் கல்வி அமைசசர் சுரனிமல இராஜபக்ச (Suranie malae Rajapaksha) வருடந்தோறும் இத் திங்கட்கிழமை தொடக்கம் வருகின்ற ஐந்து தினங்களையும் பாடசாலை நூலக வாரமாகப் பிரதிநிதித்துவப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை நூலகம்

பாடசாலை நூலகம் என்ற எண்ணக்கரு தற்போது வியாபகமடைந்து வருகின்றது. புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ பாடசாலை நூலக அபிவிருத்தி தனியானதொரு கூறாகவே செயற்பட்டு வருகின்றது. அதற்கு முன்பாக பழைய நூல்களைப் பாதுகாக்கும் தொல்பொருள் களஞ்சியமாகவும், வீண் வம்புகளுடன் கூடிய பொழுதுபோக்குக் களமாகவே இவை அமைந்திருந்தமை கண்கூடு. ஆனால் இந்நிலை தற்போது கட்டம் கட்டமாக மாற்றமடைந்து, வளர்ச்சியடைந்து வருகின்றது.

சொன்னவற்றையே திருப்பிக் கூறும் கிளிப்பிள்ளையாக மாணவர் இருக்க முடியாது. பாடங்களை மனனஞ்செய்து ஒப்புவிபபதன் மூலமோ, பரீட்சைகளை எழுதி சித்தியடைந்து விட்டாலோ மட்டும் போதாது. மாறாக, பாடநூலுக்கு வெளியே குறிப்பிட்ட விடயம் பற்றி தேடிக் கற்று பரந்த அறிவினைப் பெறவேண்டிய கட்டாய நிலை இன்று கல்விக்கு அவசியமாகின்றது. எனவே இதற்கு மேலதிகமான உசாத்துணை நூல்கள் தேவை. இது மாணவர்களிடையே ஆற்றலையும், தானே சுயமாகக் கற்கும் வாய்ப்பினையும், ஆர்வத்தையும் இது ஏற்படுத்தும்.

எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை ஆசிரியர் பற்றாக்குறை என்பது தொடர் கதை. இதற்குப் பல்வேறு காரணங்களைக் கூறிக்கொண்டு போகலாமேயன்றி தீர்வுகாண்பது கடினமான பணி. எனவே, இக்குறைபாட்டைப் போக்க நூலகங்களைப் பயன்படுத்திக் கொள்வதன் ஊடாக எமது சிறார்கள் வீணே காலத்தைக் கழித்து தமது சிந்தனைப் போக்கை சிதறடிக்கச் செய்யாது ஒருமுகப்படுத்த முடியும். இதனால் நோக்கத்தை நிறைவு செய்வதுடன் விரும்பிய நூலை வாசித்து வாசிப்புத் திறனையும், அறிவையும் வளர்த்துக் கொள்ளலாம்.

இன்றைய கல்வித் திட்டத்தில் தேடல் முக்கிய பங்கினை வகிக்கின்றது. ஆசிரியர் கற்பிக்க மாணவர் கற்கிறார் என்ற நிலை மாறி ஆசிரியர்கள் வழிகாட்ட மாணவர்கள் அவ்வழியே சென்று கற்கிறார்கள். இதுவே யதார்த்தநிலை. தொடர் மதிப்பீடுகள், ஒப்படை முறைகள் வலுச்சேர்க்கின்றன. மனனஞ் செய்யும் முறை மறைந்து, விளங்கி அறிந்து எழுதும் முறை மலர்ந்து வருகின்றது.

மாணவர்களின் அடைவு மட்டம் பரீட்சைகளில் இருந்தல்லாமல் தொடர் மதிப்பீடு களிலிருந்தே அறிந்துகொள்ளும் நிலை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆயின், இம்முறை புதிதாகையால் நடைமுறைப்படுத்துவதில் பல இடர்பாடுகள் காணப்பட்டாலும் காலவோட்டத்தில் இது பழக்கப்பட்டு விடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மாணவர்களின் இச்செயற்பாட்டிற்கு நூலகங்கள் முதுகெலும்பாக அமையும். அதாவது, தாய்ப்பால் இல்லாத குறையை புட்டிப்பால் போக்குவதற்கு ஒப்பாக ஆசிரியர் இல்லாக் குறையையும், ஆசிரியரிடம் பெற்றுக்கொள்ளாத தகவல்களையும் நூலகங்கள் நிறைவுசெய்யும் எனக் கருதப்படுகின்றது. இதற்கமைவாக உலக வங்கியின் அனுசரணையுடன் பொதுக்கல்வித் திட்டத்தின் கீழ் பாடசாலை நூலகப் பெருவளர்ச்சி அலகினூடாக பாடசாலை நூலகங்கள் தற்போது மேம்படுத்தப்பட்டு வருகின்றன. கூடுதலான பாடசாலைகளில் இச்செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்ட போதும் நாட்டின் சாதாரண சூழ்நிலை காரணமாக நிறைவுசெயயப்படாதுமுள்ளன. பாடசாலையின் தரத்திற்கேற்ப இவை நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் இப்பாடசாலைகளைத் தேர்வுசெய்யும் பொறுப்பு அந்தந்த மாகாண கல்வி திணைக்களத்திடமே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலை நூலகங்கள் நான்கு வகையாகப் பிரிககப்பட்டு வலய ரீதியாக பங்கீடு செய்யப்பட்டுள்ளன.

1. **AI** - கணனி, இன்ரநெற் வசதிகளுடன் கட்டடங்கள், நூல்கள், உபகரணங்கள் வழங்கல்.
2. **AII** - முன்னர் இவ்வசதிகள் வழங்கப் படாது எனக் கூறப்பட்டபோதும் தற்போது **AI** போன்ற வசதிகள் உள்ளன.
3. **B** வகை - கணனி, இன்ரநெற் தவிர்ந்த ஏனைய வசதிகள் **AI** போன்று வழங்கப் படும்.
4. C வகை - நூல்கள், ஆசிரியர் நூல்கள் மட்டும் வழங்கப்படும். இவை கற்றல் வசதியுடன் தொடர்புற்றிருப்பதால் நூலகமும் கற்றலுக்கான வள நிலையமும் **L.I.R.C** என அழைக்கப்படும்.

இவ்வாறாக மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதும் சில தடைக்கற்களைத் தாண்டவேண்டிய துாப்பாக்கிய நிலையும் இல்லாமல் இல்லை. இதில் நிதிப் பற்றாக்குறை, வளம் போதாமை, நூலகர், நூலக உதவியாட்களுக்கான போதிய பயற்சியின்மை, பொருத்தமான திட்டமின்மை, ஆளணியினரிடையே நிலவுகின்ற விழிப்புணர்வின்மை, அக்கறையின்மை என்பன குறிப்பிடத்தக்கவையாகவுள்ளன. இத்தடைக்கற்களை நீக்கி நூலகம் பெருவளர்ச்சி ஏற்படுத்துவதில் அதிபர்கள் பங்களிப்பு முக்கியமானது.

## நூல்பெட்டிகள் (Book Box)

நூலகத்திற்கென ஒரு கட்டடத்தை ஒதுக்கிக்கொள்வதில் அதிபர்கள் சிரமங்களை எதிர்நோக்குகையில் நூல் பெட்டித் திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் ஊடாக திட்டத்தை சிறப்புற நடாத்தி செயற்படுத்தமுடியும். பாடசாலையில் பாடப்புத்தகங்கள் (Text Book) தவிர்ந்த ஏனைய புத்தகங்கள் 40 வரை தெரிவுசெய்யப்பட்டு அட்டைப் பெட்டி ஒன்றில் வைத்து பட்டியலிட்டு வகுப்பறைகளில் வைக்கலாம். இதற்குப் பொருத்தமான, பொறுப்பான ஒரு மாணவனை நியமிப்பதன் மூலம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கும் நோக்கத்தை நிறைவு செய்யலாம்.

## நூலக ஆசிரியர் (Teacher Librarian)

நூலகங்களும், ஆசிரியர்களும் ஒருமித்து செயற்படும்போது மாணவர்கள் எழுத்தறிவு, வாசிப்புத் திறன், கற்றலில் பிரச்சினைகளைத் தீர்த்தல், தகவல் அறிதல், தொடர்பாடல் திறன் என்பவற்றில் உயர்ந்த தேர்ச்சியைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். பாடசாலையில் ஆசிரியரும், நூலகத்தில் நூலகரும் இருப்பர். இதுவே இது வரையான நடைமுறையாக இருந்தது. தறபோது இரு தரப்பினருடைய கடமைகளையும் இவ்வாசிரியரே மேற்கொள்வார். நூலகத்திற்கு வரும் மாணவர்கட்கு நூலகர் என்ற வகையில் நிர்வாகக் கடமைகளையும், ஆசிரியர் என்ற வகையில் மாணவர்களின் சந்தேகங்களைத் தீர்ப்பதும் இவரின் கடமையாகும். இது மரபுரீதியில் அமையும். இச்செயற்பாடு ஏனைய நூலகர்களைவிட வித்தியாசமானது. இதற்கென ஆசிரியர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு குறுகிய காலப் பயிற்சியை வழங்க பணிபுரிய வைக்கப்பட்டிருந்தது.

பாடசாலைக் கல்வி அபிவிருத்தி நடவடிக்கையின் முக்கிய கூறாக பங்கினை

**மு.விக்னேஸ்வரன்**
**கோப்பாய்.**

வகிக்கும் இவர்கள் குறைந்தது நாளொன்றுக்கு இரண்டு மணித்தியாலங்கள் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடவேண்டுமென விதந்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், நாடுமுழுவதும் உள்ள கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி போன்றவற்றில் நூலக அறிவியலை நூலக விஞ்ஞானம் (Library Sinence) என்ற பாடமாக கற்பிக்கவும் கல்வியமைச்சு பரிந்துரைத்துள்ளது. தற்போது பட்டதாரிகள் நியமனத்தின் போதும் கூடுதலானோர் நூலக ஆசிரியர்களாக நியமிக கப்படடு இச்செயற்பாடு வலுவுடையதாக் கப்பட்டமை யாவரும் அறிந்ததே.

## நூலகத்தின் பயன்

மாணவர்களிடையே வாசிப்புத் திறனை மேம்பாடடையச் செய்வதுடன், புதிய கருத்துக்கள், சிந்தனைகளை அறிந்துகொள்வதற்கான சூழ்நிலை உருவாகும். தேவையான விடயங்களை இலகுவில் தேடிக் கொள்ள முடியும். சுயமாகக் கற்பதனால் பொருளை அறிந்துகொள்வது இலகுவாக இருக்கும். நூலகக் கல்வியை பொறுத்த வரை சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும். வகுப்பறையில் எல்லோரும் 40 நிமிடங்களில் ஒரே நூலையே கற்க முடியுமானால் இங்கே வெவ்வேறு நூல்களைக் கற்று கலந்துரையாடுவதனால் பல விடயங்களையும், கருத்துக்களையும் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும். சிரேஷ்ட, கனிஷ்ட, இடைநிலை வகுப்புக்களிலும், கல்லூரி நிலை வகுப்புக்களிலும், ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியர் வரவின்மையை ஈடுசெய்ய நூலகம் சிறந்த நிவாரணியாக அமையும். உரத்த சத்தமின்றி அமைதியான சூழ்நிலையில் தனது கற்றல் தேவைகளை ஈடுசெய்ய நூலகம் வாயப்பாக அமையும் என்பது உறுதி. □

## கட்டுரைப் போட்டி

(சாவகச்சேரி)

லயன்ஸ் 306 B1 கழத்தினர் நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்குடன் கட்டுரைப் போட்டியை நடாத்த உள்ளனர். இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் சாவகச்சேரி லயன்ஸ் கழக காரியாலயத்திலோ அல்லது தனி மருத்தகத்திலோ ஒப்படைக்கும்படி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கேட்டுள்ளனர். (து-29)

## உணவுப் பொருள் வழங்கல்

(சாவகச்சேரி)

உலக உணவுத்திட்டத்தின் உணவுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொளளப்பட்ட வேலைகளிற்கான செப்ரெம்பர் 2005க்கான உணவுப்பொருட்கள் சாவகச்சேரி ப.நோ.கூ.சங்க கிளைகளிலூடாக வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டங்களில பங்கு பற்றிய பொது அமைப்புப் பிரதிநிதிகள் அவ் உணவுகளை உரிய கூட்டுறவுச் சங்க கிளைகளில் பெற்றுக்கொளளலாமெனச் சாவகச்சேரி நகரசபைக் செயலாளர் அறிவித்துள்ளாா.

உலக உணவு வேலைத்திட்டத்தில் பங்குபற்றியோர் பெயர் விபரங்கள், வழங்கப்படும் உணவு விபரங்கள் யாழ்.மாவட்ட உலக உணவுத்திட்டப்பணிப்பாளரினால் சாவகசசோி ப.நோ.கூ.சங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (து-47)

## உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமனம்

(சாவகச்சேரி)

வடக்கு கிழக்கு மாகாண உளளூராட்சித் திணைக்களத்தின் தலைமைப்பீட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக மு.செ.சரவணபவ நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் சாவகச்சேரி நகரசபை, வவுனியா நகர சபைகளில் செயலாளாராகக் கடமையாற்றி இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில சித்தியடைந்தமையால் பொது நிர்வாக அமைப்பினால் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு நியமனம் வழங்கப்பட்டு வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளரினால் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் உள்ளூராட்சிச் சேவையில் முப்பது வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (து-47)

## சைக்கிள் உரிமத் தகடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை வருமானவரி பரிசோதகர்கள் நகரில் செல்லும் துவிச் சககர வண்டிகளை மறித்து உரிமத்தகடுகள் அற்ற துவிச்சக்கர வண்டிகளுக்கு உரிமத்தகடுகளை அவ்விடத்தல் வைத்தே விநியோகித்து வருகின்றார்கள். (து-29)

## சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை, சூராவத்தை ஆ ய இடங்களில் யாழ் மாவட்ட இயேசு சபை அகதிப்பணி அமைப்பினால நடாத்தப்பட்ட வாழ்வியல் பயிற்சிகளை முடித்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது.

இங்கு தையல், பூவேலை, பன்னவேலை, தலைமைப் பயிற்சி, சிகை அலங்காரம், கணனி ஆகிய பயிற்சிகளை முடித்த மாணவர்களுக்கான சான்றிதழ்களே வழங்கப் பட்டன.

இந்நிகழ்வில் இலங்கைக்கான இயேசு சபை அகதிப்பணி இயக்குனர் வணபிதா வின்னியோசப், இயேசுசபை அகதிப்பணி அமைப்பின் தெற்காசிய இயக்குனரான வணபிதா பி.எஸ்.அமல்ராஜ், பர்மாவுக்கான இயேசுசபை அகதிப்பணி சபை இயக்குனர் வணபிதா சி.அமல் ஆகியோர் சபை இயக்குனர் சான்றிதழ்களை வழங்கினர். இந்நிகழ்வில் இயேசுசபை அகதிப்பணி அமைபபின் சர்வதேச இணைப்பாளர் செசிலியா பொக் உம் கலந்துகொண்டார்.(து-108)

## தேர்தல் கடமைகளுக்காக பொலிஸாருக்கு ரூ.18 கோடி ஒதுக்கீடு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் பொலிஸாருக்காக தேர்தல் திணைக்களம் 18 கோடி ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன்மூலம் பொலிஸாருக்கான வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல், மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்காக தேர்தல் திணைக்களம் ஒதுக்கியுள்ள மொத்த ஒதுக்கீடு 100 கோடி ரூபாவாகும்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் பொலிஸார் தேர்தல ஆணையாளர், உதவித் தேர்தல் ஆணையாளர் மற்றும் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளின் பணிப்புரைகளை செயற்படுத்த வேண்டுமென்று தேசிய பொலிஸ் ஆணைக குழு பரிந்துரைத்துள்ளது. (ற-4)

## பண்ணைப்பாலம் புனரமைப்பு; காரைநகர் கிழக்கு வீதியில் போக்குவரத்து அதிகரிப்பு

(காரைநகர்)

காரைநகர் கிழக்கு வீதியின் வீதிப் போக்குவரத்து அதிகரித்துள்ளது.

கடந்த வாரத்தில் இருந்து பண்ணைப் பாலம் புனரமைப்பதற்காக அப்பாதையினூடாக தீவுப்பகுதிக்கான வாகனப் போககுவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தீவுப் பகுதிக்கு வாகனங்களைக் கொண்டுசெல்வோர் காரைநகர் கிழக்கு வீதியினூடாக கடற்பாதைப் படகு மூலம் ஊர்காவற்றுறைக்கு பயணம் செய்கின்றனர். இதனால் காரைநகர் கிழக்கு வீதியின் வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளது.

அதேநேரம், காரைநகர் ஊர்காவற்றுறைக்கு இடையிலான பாதைப்படகின் சேவைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிககப்பட்டுள்ளது. (ற-246)

மூடன் இறுதியில் செய்வதை அறிவாளி ஆரம்பத்தி லேயே செய்து விடுவான். -அப்துற் றஹீம்-

வலம்புரி

## தமிழர்கள் பிரிந்துசெல்ல அனுமதிக்க வேண்டும் தென்னிலங்கை புத்திஜீவிகள் வெளியிட்ட உயர் சிந்தனை

இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வைக்காண இலங்கை ஆட்சியாளர்கள் தயங்குவார்களாயின் தமிழர்கள் பிரிந்து சென்று தனிநாடு அமைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும். இவ்வாறு சிங்களப் புத்திஜீவிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சரியான நேரத்தில் சரியானவாறு கருத்து வெளியிட்ட சிங்களப் புத்திஜீவிகளின் சிந்தனை பற்றி தென்னிலங்கை ஆட்சியாளர்கள் சிந்திக்கத் தவறினாலும் உலக நாடுகள் அதுபற்றி சிந்திப்பது காலத்தின் தேவையாகும்.

ஒரு இனம் பல ஆண்டுகளாக போராட்டம் நடத்துகின்றதெனில்-அந்த இனத்தின் உரிமை விடயத்தில் சரியான தீர்வைக்காண பெரும்பான்மைப் பலம் கொண்ட அரசு முன்வரவில்லையெனில் போராட்டம் நடத்தும் இனம் பிரிந்து சென்று தனிநாடு அமைப்பதற்கு சர்வதேச சமூகம் அனுமதி வழங்க வேண்டும்.

இதனையே தென்னிலங்கை சிங்கள புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். விடுதலைப் போராட்டம் பற்றி விமர்சிக்கின்ற சில நாடுகளுக்கு சிங்கள புத்திஜீவிகளின் மேற்போந்த கருத்து உச்சந்தலை அடியாக அமைந்து விட்டது.

தமிழ் மக்கள் காலா காலமாக சிங்கள ஆட்சியாளர்களிடம் அடிமைப்பட்டு வாழும் நிலைக்கு முடிவுகட்டவே விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

எமது இனம், எமது தாயகம், எமது தாய் மொழி என்ற இனத்துவக்கூறுகளின் வழியில் சிங்கள ஆட்சியாளர்களுடன் சேர்ந்துவாழ முடியாது என்ற நிலையில் தமிழ் மக்கள் சமாதானமாக கேட்கின்றனர். எங்களை பிரிந்து செல்ல அனுமதியுங்கள்.

இந்த கேள்விக்கான பதில் எதுவாக அமைய வேண்டும் என்பது பற்றி இம்மியும் சிந்திக்காத இலங்கை அரசுகள் படைப்பலத்துடன் தமிழின அழிப்பினை மேற்கொண்டன.

அதன் விளைவாகவே தமிழ் இளைஞர்கள் தம் தோள்மீது ஆயுதங்களை சுமக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பற்றி இன்று வரை விமர்சிக்கின்றவர்கள் சிங்கள புத்திஜீவிகள் வெளியிட்ட கருத்தை ஒருகணம் சீர் தூக்கி ஆராய வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற பிரதான கட்சிகளின் வேட்பாளர்களிடம் இனப்பிரச்சினைக்கான சரியான தீர்வுத்திட்டம் இல்லை.

இந்நிலையில் தமிழ் மக்கள் பிரிந்து சென்று தமக்கான தனிநாட்டை அமைப்பதற்கு சர்வதேச சமூகம் அனுமதி வழங்க வேண்டும்.

இது தமிழ் மக்கள் தரப்பின் கருத்தல்ல. சிங்களப்புத்திஜீவிகளின் நியாயமான கருத்து. இதற்கு சர்வதேசத்தின் பதில் என்ன?

# தமிழ் மக்களின் பிரச்சினைகளைத்தீர்க்க தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளிக்கவேண்டும்

## ரணிலுக்கு மகேஸ்வரன் எம்.பி. கடிதம்



தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு தேர்தல்பிரசாரத்தின்போது புதிய வாக்குறுதிகளை அளித்து அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சி ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சில விடயங்கள் வருமாறு.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, வத்தளை, மாவனல்ல, கண்டி, நுவரெலியா, பதுளை, பண்டாரவளை, கொழும்பு மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுடன் பாடசாலை வசதிகள், வேலை வாய்ப்புக்கள், சுகாதாரம், வீடமைப்பு ஆகியவற்றிலும் உடனடியாக கவனம் செலுத்தப்படவேண்டும்.

குறிப்பிட்ட ஒரு கால வரையறைக்குள் சுனாமிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் தமிழ் மக்களுக்கு அவர்களது பழுதடைந்த, முற்றாக அழிக்கப்பட்ட வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இந்த நாட்டின் சகல பகுதிகளிலும் வாழும் தமிழ்மக்கள் நயினாதீவில் உள்ள சரித்திரப்பிரசித்தி பெற்ற ஆலயத்தை தரிசிக்க சிறந்த பஸ்போக்குவரத்துச் சேவை அமைக்கப்படவேண்டும்.

வடக்கு-கிழக்கில் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள காணிகளுக்கும் கட்டடங்களுக்கும் நட்டஈடு வழங்கப்படவேண்டும். அன்றேல் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்த வாடகை வழங்கப்படவேண்டும்.

இருதய வியாதி கான்ஸர்,கிட்னி நோயாளர்களுக்கான வைத்திய செலவு முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கொழும்பின் அடுத்த மேயராக வருவதற்கு தமிழர் ஒருவருக்கு சந்தர்ப்பம் அளித்தல். கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவுக்கும் இரண்டு தமிழ் இறப்பு பிறப்பு திருமணப் பதிவாளர்களை நியமனம் செய்தல்.

தமிழ் சமூகத்தினரின் தேவைகளை கவனிப்பதற்காக பொலிஸ் நீதிமன்றம், காணிப்பதிவகம், கச்சேரி ஆகிய சகல அரச நிறுவனங்களிலும் தமிழ் ஊழியர்களை நியமித்தல்.

தமிழ் கலாசார மேம்பாட்டுக்காக குறைந்த பட்சம் 15 மில்லியன் ரூபாசெலவில் சகல கிராமசேவகர் பிரிவிலும் கலாசார மையங்களை அமைத்தல் போன்ற வேண்டுகோள்கள் மகேஸ்வரனின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச.து)

# பிக்குகள் அரசியலில் ஈடுபட இலங்கைச் சூழல் உகந்ததல்ல

## உடுவே தம்மாலோக தேரர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசில் இருந்து புத்த பிக்குகள் வெளியேறவேண்டுமென்று ஜாதிக ஹெல உறுமயக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர் வலியுறுத்தியுள்ளார்.

பிக்குகள் அரசியலில் நுழைவதற்கான கதவுகளை திறந்து விட்டது ஜாதிக ஹெல உறுமய இருந்தும் இப்போதைய சூழலில் அரசியலில் ஊழல் மலிந்து கிடக்கிறது.

இவ் அரசியல் சூழலானது நாட்டில் பிக்குகளுக்கு உகந்தது அல்ல. அரசியலில் இருந்து பிக்குகள் வெளியேற வேண்டும். பிக்குகள் அரசியலில் நுழைகிற கதவை ஜாதிக ஹெல உறுமய மூடவேண்டும்.

எதிர்வரும் வாரங்களில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான நிலைப்பாடு அறிவிக்கப்படும்.

மகிந்த ராஜபக்ஷவை ஜாதிக ஹெல உறுமய ஆதரித்தாலும் நான்தனிப்பட்ட முறையில் யாரை ஆதரிப்பது என்பதை அறிவிப்பேன் என தேரர் மேலும் தெரிவித்தார். (ச-4)

# ஐ.நா.தலையீட்டை தடுக்கவே புலிகள் மீதான ஐரோப்பாவின் தடை

(பெல்ஜியம்)

இலங்கை இனப்பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபை தலையிடுவதைத்தடுப்பதற்கே தமிழீழ விடுதலைப்புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் பயணத்தடையை விதித்துள்ளது என்று பிரான்ஸ் தமிழர் மனிதர் உரிமைகள் மையத்தின் தலைவர் கிருபாகரன் தெரிவித் தார்.

பெல்ஜியத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற எழுக தமிழ் தமிழர் உரிமை முழக்கப்போராட்டத்தில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

இங்கே பெய்கின்ற மழைக்கு அஞ்சிப் போகின்றவர்கள் அல்ல நாம். குண்டு மழைகளில் பிறந்தவர்கள் நாங்கள். ஐக்கிய நாடுகள் தப்பித்தவறி தமிழர் பிரச்சினையை எடுக்கும் முன்பாக உங்களுக்குத் தடை போடுகிறோம் என்று போட்டுள்ளார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையால் ஐ.நா சபை இந்தப்பிரச்சினையை எடுப்பதில் தாமதிக்கக்கூடும். இதை எண்ணித்தான் இத்தடைவிதிக்கப்பட்டுள்ளது. 75 ஆயிரம் தமிழீழ மக்கள் போரினால் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்களே... அதை ஐரோப்பிய ஒன்றியம் கணக்கில் எடுத்ததா? எமது பிரதேசம் சிங்கள மயமாக்கப்பட்டிருக்கிறதே அதைக் கணக்கில் எடுத்தார்களா?

தேசியத்தலைவர் பிரபாகரனின் தலைமையில் 20 ஆண்டு கால போருக்குப்பின்பு அங்கீகரிக்கப்படாத தனியரசு நிறுவப்பட்டுள்ளது. காவல்துறை, நீதித்துறை, நிதித்துறை என அனைத்துத் துறைகளும் சரியாக கட்டமைக்கப்பட்டுள்ளதே அதைக்கணக்கில் எடுத்தார்களா?.

உலகப்போராட்டங்களை எடுத்துப்பாருங்கள். தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு என்ன நடந்தது? அந்த மக்கள் விடுதலைப்போராட்டத்தை நடத்திய போது பயங்கரவாதியாக முத்திரை குத்தப்பட்டார்கள். இறுதியிலே தென்னாபிரிக்கமக்கள் விடுதலையைத்தான் பெற்றார் கள்.

35 ஆண்டு காலமாக எமது மக்கள் சாத்வீகப்போராட்டங்களை நடத்தினர். சாத்வீகப் போராட்டம் சரிவராத நிலையில் தலைவர் பிரபாகரனால் ஆயுதப்போராட்டம் நடத்தப்பட்டதால்தான் இன்று நாம் தலை நிமிர்ந்து நிற்கின்றோம்.

இவர்கள் எவ்வளவு தடைகளை விதித்தாலும் அது எமது விடுதலையை விரைவுதான் படுத்தும் என்றார். (சு)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



பலமான காற்று எழுந்தால் ஏரியின் நீர்ப்பரப்பின் மேல் மெல்லிய அலைகள் தோன்று கின்றன. அப்படிப்பட்ட நிலையில் அந்த ஏரியில் சந்திரனின் பிரதி விம்பத்தை நாம் தெளிவாக பார்க்க முடியாது. தெளிவான சலனமற்ற ஏரியின் நீரிலேயே நாம் சந்திரனின் தெளிவான பிரதி விம்பதைப் பார்க்க முடியும். அது போலவே நமது மனதி லும் ஆசை என்ற அலைகள் எழுமானால் அதில் ஆத்மாவின் பிரதிபலிப்பை காண முடியாது.

சுவாமி விவேகானந்தர்

# யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக தனித்தரப்பு தீர்மானம் எடுக்கமுடியாது

## சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன்

(கிளிநொச்சி)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக ஒருவராலும் தனித்தரப்புத் தீர்மானம் எடுக்கமுடியாது என்று விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டால் அது யுத்தநிறுத்த உடன்படிக்கையினை முறிவடையச் செய்யும் என்று விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு ஏற்ப விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் சமதரப்பு என ரொய்டருக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மாற்றியமைக்கவோ அல்லது தலையிடவோ ஒருவருக்கும் அதிகாரம் இல்லை.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்டுவந்த மூன்றரை வருட காலத்தினை நோக்கும்போது ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மீதான நம்பிக்கையினையும் ,மரியாதையினையும் விடுதலைப் புலிகள் மட்டுமல்ல தமிழ் மக்களும் இழந்துபோயுள்ளனர் என புலித்தேவன் மேலும் தெரிவித்தார். (ச-4)

## சாரதி அனுமதிப் பத்திர செயன்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

புதிய சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக நாளை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவிருந்த செயன்முறைப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை காலை 9 மணிக்கு நடைபெறுமென யாழ்ப்பாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

## போராளி வீரச்சாவு

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். லெப்.குமுதன் நாகராசா புலேந்திரன் (கிரான் மட்டக்களப்பு) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார். (ச)

## சி.சு.க....

தடுப்பது குறித்தும் இருவரும் கருத்துக்களை பரிமாறியுள்ளனர்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர்களை ஜனாதிபதி இன்று சந்தித்துப் பேசவுள்ளார்.

இன்றுகாலை 10 மணிக்கு இச்சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்புக் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-4)

## முன்னாள் அதிபர் காலமானார்

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.குகதாசன் நேற்று முன்தினம் காலமானார்.

யாழ். இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றிய குகதாசன் தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் தலைவராகவும் கடமையாற்றியவர்.

விலங்கியல், தாவரவியல் தொடர்பான பல்வேறு கட்டுரைகளை வெளியிட்டுதமிழ் மாணவர்களின் கல்விக்குப் பேருதவியாற்றிய குகதாசனின் பூதவுடல் இல.70/10 அரசடி வீதி, நீராவியடியிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. (ந)

# வாகன சான்றிதழ்கள் இன்றி சென்றவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

வாகன சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரி அனுமதிப் பத்திரம் மற்றும் தலைக்கவசம் அணியாத குற்றங்களுக்காக யாழ். பொலிஸாரால் நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட வழக்குகளுக்கு மொத்தமாக 33 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டது.

யாழ். நகரப் பகுதியில் மோட்டார் வாகனச் சட்டங்களை மீறியோர்கள் யாழ். பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களில் வாகன உரிமைப் பத்திரம் எதுவுமே இல்லாதவர்களிடமிருந்து 8 ஆயிரத்து 500 ரூபா வீதம் அறவிடப்பட்டது.

இதேவேளை தலைக் கவசம் அணியாத ஒருவரிடம் தண்டப்பணமாக ஆயிரம் ரூபா அறவிடப்பட்டதுடன்; தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிள் ஓடமாட்டேன் என ஆயிரம் தடவைகள் எழுதவும் விடப்பட்டது.

அத்துடன் துவிச்சக்கரவண்டியில் பரவலாகச் சென்ற ஒருவரிடம் தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன் துவிச்சக்கரவண்டியில் பரவலாகச் செல்லமாட்டேன் என ஆயிரம் தடவைகள் நீதிமன்றத்தில் வைத்து எழுதவிடப்பட்டது. (ச-19)

## வீதியில் கூடிநின்ற இளைஞர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்!

(துன்னாலை)

வடமராட்சியில் நேற்று முன்தினமிரவு சந்தியில் கூடிநின்ற இளைஞர்கள் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளனர். சனசமூக நிலையங்கள், கோவில்கள் என்பவற்றுக்கு முன்னால் இரவுவேளைகளில் கூடிநின்றவர்களே தாக்குதல்களுக்குள்ளானார்கள்.

துன்னாலை கோவிற்கடவை சனசமூக நிலையம்,வல்லியானந்தம் சனசமூக நிலையம், தாமரைக் குளக்கட்டு ஆகிய இடங்களில் இரவுவேளைகளில் நின்றவர்கள் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுமார் 10 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் முகத்தினை கறுப்புத்துணியினால் மூடி, தலையில் தலைக்கவசம் அணிந்தவாறு வந்தவர்கள் பொல்லுகள்,வாள்கள் என்பவற்றால் தாக்கியதாக தாக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அப்பகுதியில் மக்களின் நடமாட்டம் குறைந்துள்ளது. (ச-101)

## 'எழுக தமிழ்' பேரணியில்...

கொடியினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஏற்றினார்.

பின்னர் தொடங்கிய உரிமை முழக்கப் போராட்டத்தில்;

சூரியத் தேவனே! எங்கள் தலைவன்!!

தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே!

ஐரோப்பிய ஒன்றியமே மீளப்பெறு! மீளப்பெறு!!

விடுதலைப் புலிகளின் பயண வரவேற்பு மறுப்பை மீளப்பெறு!

என்பன உள்ளிட்ட முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

தமிழீழத் தேசியக்கொடி, தமிழீழ தேசியத் தலைவரின் உருவப் படம் மற்றும் சின்னங்களையும் கைகளில் தாங்கியவாறும் சிவப்பு மஞ்சள் உடைகளை அணிந்த வாறும் மக்கள் எழுச்சியுடன் பங்கேற்றனர்.

எழுக தமிழ் ஏற்பாட்டுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் அல்பேட்டின் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் முதன்மை உரையினை விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் நிகழ்த்தினார்.

அதனையடுத்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அதன் உறுப்பு நாடுகளில் வாழும் தமிழர்கள் மனுக்களைக் கையளித்தனர். (ச-4)

## தமிழ்த் தேசி...

காணிப்புக்குழுவினர் உரியமுறையில் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் தாம் கேட்டுக்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா அலுவலகத் தில் நடைபெற்ற இச்சந்திப்பில் கண் காணிப்புக்குழுவின் வவுனியாப் பிரதிநிதி, கூட்டமைப்பின் சார்பில் சிவநா தன் கிஷோர், விநோதராதலிங்கம்,சிவசக்தி ஆனந்தன் போன்றவர்களுடன் தமிழ் எழுச்சி மாநாட்டின் ஏற்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர். (ச-4)

## மினிவான் - ஆட்டோ விபத்து...

மோட்டார் சைக்கிளை விலத்திச் செல்லமுற்பட்டவேளை எதிரே வந்த ஆட்டோவுடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது ஆட்டோவில் சென்ற நால்வரில் ஒருவர் உயிரிழந்தார். மற்றைய மூவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

திருமண நிகழ்வொன்றில் வீடியோப்படம் எடுப்பதற்காக ஆட்டோவில் யாழ்ப்பாணம் நோக்கிவந்த ஆட்டோவே விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் ஒரு பிள்ளையின் தந்தையான சாவகச்சேரி கல்லடிமூட்டு ஒழுங்கையைச் சேர்ந்த வீடியோப்படப்பிடிப்பாளரான சதீஸ்குமார் (வயது 30) என்பவரே உயிரிழந்தார்.

அதேயிடத்தைச் சேர்ந்த எஸ். சுதாகரன், நா.பிரசாத் (வயது 22) உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரிப் பொலிஸார் இரு வாகனங்களையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்றனர். (ச-19,108,37,21)


திருமணக்கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
☆ விசேட வைபவங்கள் ☆ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
T.P:0777-903090, 077-3086939,0777-246117, 077-6018467
(c-அ1699)



அன்பு வாசகர்களே...

உங்கள் வலம்புரியின் ஆறாவது ஆண்டின் நிறைவில் பல பக்கங்களைக்கொண்ட

வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வெளிவரவுள்ளது.

கல்வி, மருத்துவம், உளவியல், சோதிடம், ஆன்மீகம், விஞ்ஞான ஆராய்ச்சிகள், வரலாறு, பொருளியல், சமூகவியல், அரசியல், கவின்கலை தொடர்பான பல்துறைசார் ஆக்கங்கள் இச்சிறப்பிதழில் இடம்பெறவுள்ளன.

துறைசார் அறிஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் ஆக்கங்களை

பிரதம ஆசிரியர்
வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்
வலம்புரி
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

நிறைவு விழாச் சபை, வலம்புரி



மனோகரா யாழ்.
பார்த்திபன் . லட்சுமிராய். வடிவேல் நடித்த
குண்டக்க மண்டக்க...
கா.நே.10.30.02.30.06.30.09.30(பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
ஆர்ஜா, சோனியாஅகர்வால் நடித்த
ஒரு கல்லூரியின் கதை
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)
தீபாவளி வெளியீடு
தனுஷ் நடித்த
அது ஒரு கனாக்காலம்

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார் (இரு வேடங்களில்)
நமீதா . வடிவேல் நடித்த
சாணக்கியா
கா.நே: 11.00, 02.45, 6.00, (பு.நே)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.